
ISSN 2424-6654


தமிழ்த் தூது


# தாயக ஒலி
# THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 28

PERIODICAL JAFFNA PUBLIC LIBRARY











பங்குனி - சித்திரை 2017 விலை ரூபா 100/=

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடைவைகளையும்

தெரிவு செய்து கொள்ளுங்கள்



பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக்கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்

கூறைப் புடைவைகள்
பட்டுப்புடைவைகள்
மற்றும் சீக்குன் அனைத்தும்
30%
விலைக் கழிவில்!

## SELVARAJA
### Gold House & Textiles
Exclusive Designer Jewellery & Sarees




YOU
ARE
THE
BEST
FOR
YOU
WE ARE THE BEST

**162B, Mitcham Road, London SW17 9NJ**

**Tel : 020 8767 3795 | 07825 005 269**

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY




Dream Big | Think Big | Achieve Big

73, Main Street, Colombo 11. | T: +94 11 239 1592, 239 1593 | F: +94 11 239 1745 | E:info@littleasia.lk
www.littleasia.lk | skype : little.asia.silk

317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 250 8934
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype : little.asia.emporium

follow us on f g+ YouTube S


AA Accounting & Business
Solutions Associates
265 Haydons Road / London SW19 8TY
Accountants and Management Consultants
for Efficient and Quality Professional
Accounting Services
We Specialise in
Year End Accounts Preparation
Management Accounts
Solicitors Accounts
Book Keeping
Self Assessment Tax Returns
Vat and TAX Investigations
Payroll Preparation
Business Startup Advice
Business Plans and Cash Flow Forecasts
Management Consultancy
Also through our contacts
we are able to raise Finance for New Business
Contact:
Uthayanan or Sasi
Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205
www.aa-accounts.co.uk

ISSN 2424-6654

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

[தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு]

வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி - சித்திரை 2017 வில்-05 ஒலி-28

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்

**தாயக ஒலி**

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
ந.கருணை ஆனந்தன்
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
செ.ராஜேந்திரா
இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**
கனடா : முருகேசு கிருபாகரன்
அ.பற்குணன்
இலண்டன் : இ.பாலேந்திரநாதன்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
பிரான்ஸ் : ச.சச்சிதானந்தம்

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர்**
திருமலை பாலா
தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்
– ஆசிரியர்

## உள்ளே ஒலிப்பவை

பேனா முனையிலிருந்து... 02

**கட்டுரை :**
- திருக்குறள் காட்டும் பொதுமைப் பண்புகள் 03
- தமிழும் தலைவணங்கும் தவப்புதல்வன் 08
- புலம் பெயர்ந்தோர் சிறுகதைகள் 20
- உளவள ஆலோசனை வினைத்திறன் 28
- இல்லறத்தில் விட்டுக்கொடுப்பின்..... 32
- மனிதநேயமும் ஆன்மநேயமும் 38

**சிறுகதை :**
- எனக்கொரு அப்பா வேணும் 12
- ஆதாமும் 43

**கவிதை :**
- கவிச்சரம் ● வாசனை 26
- டெங்கு ஒழிப்போம் 30

**நூல் விமர்சனம் :**
- அருளாளர்கள் அறுபத்து மூவர் 27

**ஆரோக்கியம் :**
- மார்பகப் புற்றுநோய்க்கு சிகிச்சை 29

**சிறுவர்கதை :**
- முயலின் குதிரைச் சவாரி 35
- உண்மையின் பயன் 46

**கேட்டதைச் சொல்ல வந்தோம் :**
- குழந்தைகளின் படைப்பாற்றல் 25
- எம்மவர்கள் மீண்டெழுவதற்கு 32

**சிந்தனை விருந்து :**
- வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் 36

**நகைச்சுவை கதை :**
- மந்திரியின் மதிநுட்பம் 37

**உங்கள் விருந்து :** 47-48

**ஏனையவை :**
- வன்னி மண்ணின் மைந்தன் 07
- நீத்தார் பெருமை 18-19
- அறிந்த செய்தி 19
- இரா.உதயணனுக்கு விருது 24

அட்டையில்....
உலகப்பெருமஞ்சத்தின் அழகுத் தோற்றம்

பேனா முனையிலிருந்து...



# வீதிவிபத்துக்களைத் தவிர்ப்போம் உயிர்களைப் பாதுகாப்போம்

எமது சின்னஞ்சிறிய நாட்டிலே வீதி விபத்துக்களால் தினமும் குறைந்தது ஏழு உயிர்களுக்கு மேல் மரணிப்பதாகப் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் பலர் ஏதோ ஒரு வகையில் அங்கவீனர்களாகவும் ஆக்கப்படுகின்றனர். வாகனங்கள் பலவும் வீதி விபத்துக்கள் காரணமாக பலவாறு சேதமாகியுள்ளன. முன் அவதானிமின்றி வாகன சாரதிகளும் பாதசாரிகளும் இருப்பதாலேயே அநேகமான வீதி விபத்துக்கள் நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அது உண்மையே.

இத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதற்கும், உயிரிழப்புக்கள் பெருமளவு நடந்தேறுவதற்கும் காரணமாக இருப்பவர்கள் நாங்கள் தான் என்பதையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொடர்ந்து இத்தகைய விபத்துக்களும் உயிரிழப்புக்களும் ஏற்படுவதற்கும் அதைப் பெருமளவில் தடுப்பதற்கும் எமது சமுதாயத்தைத் திருப்பிப் பார்க்க வைக்க வேண்டும். இதற்கான விழிப்புணர்ச்சியை பாடசாலை மட்டத்திலிருந்து தொடங்கி பல்கலைக்கழகங்கள், மதத்தாபனங்கள், பல்வகைகளிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிறுவனங்கள், சங்கங்கள் போன்றவையும் முழு முயற்சியுடன் ஈடுபட வேண்டும்.

மக்களை விழிப்புணர்ச்சி கொள்ள ஒரு சில அமைப்புக்கள் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இலங்கைச் சுகாதார அமைச்சும் ஊடகங்கள் வாயிலாக மக்களை விழிப்புணர்ச்சி கொள்ளவைக்க முனைப்புடன் செயற்படுகின்றது.

இருந்தும் வாகன விபத்துக்களும் உயிரிழப்புக்களும் குறைந்தபாடில்லை. தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. வாகன ஓட்டுநர்கள் வீதி ஒழுங்குகளை முறையாகக் கடைப்பிடிப்பார்களேயானால் விபத்துக்களைப் பெருமளவு குறைத்துக்கொள்ள முடியும். அதேவேளை பாதசாரிகள் வீதிகளில் செல்லும் போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். வீதியோரமாக நடந்து செல்லும் போது வலது கைப்பக்கமாக நடந்து செல்ல வேண்டும். அப்பொழுதுதான் முன் வருகின்ற வாகனத்தை அவதானித்து அதற்கேற்ற வகையில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும். மேலும் வீதியைக் கடக்கும் போது மஞ்சள் கோட்டின் அதாவனிப்புடன் வீதியில் பொருத்தப்பட்டுள்ள கலர் வெளிச்ச சமிஞ்ஞைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் வீதியில் தம்மை மறந்த நிலையில் மற்றவர்களுடன் உரையாடிக் கொண்டு செல்வத்தை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும். இதை இன்றைய இளமட்டங்கள் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். கைத்தொலைபேசிகளுக்கு அடிமையானவர்களால் இத்தகைய ஆபத்தான செயற்பாட்டை நிறுத்த முடியவில்லை. தமக்கும் ஆபத்து மற்றவர்களுக்கும் ஆபத்து என்பதை உணராதவர்களாக இருப்பது வேதனைக்குரியது. வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் வாகனத்தை ஓட்டிச்செல்லும் வேளையில் கைத்தொலைபேசியில் உரையாடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அதனால் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன என்பதைச் சொல்லியே ஆக வேண்டும்.

‘நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்’ என்ற கருத்தும் பொருந்துவதாகவே உள்ளது. தன் உயிரைப் பாதுகாப்பதுடன் ஏனைய உயிர்களின் பாதுகாப்புக்கும் ஏற்ப கட்டுக்கோப்பை ஆதாரசுருதியாகக் கொண்டு சமுதாயம் இயங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்..... - ஆசிரியர்

# திருக்குறள் காட்டும் பொதுமைப் பண்புகள்

தம்புசிவா

மனிதன் மனிதனாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய நெறிமுறைகளை சுட்டிக்காட்டும் பொதுமை நூலாக திருவள்ளுவர் தந்த திருக்குறள் அமைந்துள்ளது. " கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்" என்று போற்றப்படும் திருக்குறளை "முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் தமது அளவு கோல் கொண்டு பின்வருமாறு இயம்பியுள்ளார்.

"பல்வேறு வகைத் தொடர்பு பெற்றானொருவனுக்கு ஒவ்வொரு தொடர்புடையார் மட்டும் அவன் இன்னவாறு ஒழுகுதல் வேண்டும் என்று கற்பிக்கும் நூலே யாவற்றினும் மேம்பட்ட நூலாகும். அதுவே உயிர்களை உய்விக்கும் பான்மையுடையது. ஆயின், அப்பெற்றியதாய நூல்தான் யாதெனில், அதுவே திருத்தகுசீர் தெய்வத் திருவள்ளுவர் அருளிய ஒப்புயர்வற்ற மாணிக்கத் திருக்குறளாகும். என்னையோவெனின், கருவி நூல்களும் கலை ஞானங்களும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணையவாயினும் அவையனைத்தையும் தராசின் ஒரு தட்டிலிட்டு, உயிர்க்குறுதி பயப்பதாய திருக்குறட் செந்தமிழ் நூலை மற்றோர் தட்டிலிட்டால் திருக்குறட் தட்டு பொருட் சிறப்பினால் தாழ்ந்து நிற்குமெனில் மிகையாகாது" என்று ஆழ்ந்து நோக்கியுள்ளார்.

இல்லறவியலில் - அறன் வலியுறுத்தி, இல்வாழ்க்கையில் வாழ்க்கைத்துணைநலமும் மக்கட் பேறும் பெற்று, அன்புடமையோடு விருந்தோம்பி, இனியவை கூறி செய்நன்றியறிந்து நடுவுநிலைமை தவறாது அடக்கத்துடன், ஒழுக்கமுடன், பிறனில் விழையாது, பொறையுடன், அழுக்காறாது, வெஃகாது, புறங்கூறாது, பயனில சொல்லாது, தீவினையஞ்சி, ஒப்புரவறிந்து, ஈகையுடன் புகழ்பெற வாழ வேண்டும்" என்று பல பொதுமைப் பண்புகள் பகரப்பட்டிருப்பதை மனங்கொள்ளலாம்.

" தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்து ஆறுஓம்பல் தலை"

அதாவது வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் இல்லத்திற்குப் புதிதாக வரும் விருந்தினர், உறவினர், தன் குடும்பத்தார் ஆகிய ஐவகையினரையும் உரிய முறையில் பேணிக் காப்பாற்றுதல் இல்வாழ்வார்தம் தலையாய கடமையாகும் என்கிறார். தான் வாழ்ந்தால் மட்டும் போதாது மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும் என்ற பொதுமைத் தத்துவத்தை வள்ளுவனாரும் முன்வைத்துள்ளார்.

" பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

பழி எதுவும் நேராது தன்னைக் காத்துக்கொண்டு தன்னிடம் இருப்பவற்றை மற்றவர்க்குப் பகுத்து அளித்து வாழ்பவனின் வாழ்க்கை எக்காலத்தும் வளம் குன்றுவது இல்லை.

*" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"*

தன்னைக் கூட பிறர்க்காகத் தானம் செய்வார் அன்புடையார். தன்னைக் காக்க பிறர்பொருளை தட்டிக்கொள்வார் அன்பில்லார். இதன்மூலம் பிறர் பொருளைச் சுரண்டுவது பொருத்தமற்றது என்பதை அன்பால் உணர்த்துகின்றார். என்னே அவர்தம் பெருந்தன்மை.

ஒழிபியல் - குடிமை காத்து, மானம் பெருமை சான்றாண்மையுடன் பண்புடையராய், நன்றியில் செல்வத்தின் குற்றமறிந்து, நாணுடைமையுடன் குடிசெயல் வகை தெரிந்து, உழவினைப் போற்றி, நல்குரவு இன்றி, இரவு, இரவுச்சங்களின் கூறுபாடு அறிந்து, கயமை ஒழித்து வாழ்தல் சிறப்புடையதெனச் சொல்லப்பட்டுள்ளது.

" இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு"
என்னும் குறளுக்கு

*"மனைவி மக்கள் தலைக்காத்து*
*மகிழ்வாய் உழைத்து வாழ்வதெலாம்*
*மனைக்கே வந்த விருந்தினரை*
*மனத்தால் ஊட்டி மகிழ்தற்கே!*

என்று புலவர் இராச.கண்ணையன் கவிதை தந்துள்ளார். எல்லோருடனும் மனமகிழ்ச்சியுடன் வாழ்வதே பண்பாகும் என்ற உன்னத கோட்பாட்டை இக்குறள் தந்து நிற்கிறது.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்" என்ற குறள் பதங்களும்

"இலனென்று தீயவை செய்யற்க" என்ற வரிகளும் பொதுமைக் கருத்தைக் கூறுவனவாக அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம்.

"திருக்குறள் எளிது இனியது பழுத்த அறிவின் பிழிவாய் வெளிவந்தது. புதியதோர் சமுதாயம் படைக்க, பொதுநல சமுதாயம் படைக்க எழுந்தநூல்" என்கிறார் ஒரு அறிஞர்.

*"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ்கொண்ட தமிழ்நாடு"* என்று பாரதியாரும் வள்ளுவன் புகழைப் பாடியுள்ளார்.

*"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"*

அதாவது பொது நலங் கருதுபவர் விடாமுயற்சியோடு பொருள் தேடிச் சேர்ப்பதெல்லாம் தகுதி வாய்ந்தவர் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்கே.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு"*

பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர்மக்கள்அனைவருக்கும் பயன்தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும். இங்கே பொருட்கள் ஒரு இடத்தில் குவிந்து கிடக்காமல் எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்னும் பொதுவுடமைக் கருத்தை நீருடன் ஒப்பிட்டுத் தெளிவாக விளங்கியுள்ளார் திருவள்ளுவனார்.

*"களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து*
*ஆவது போலக் கெடும்"*

கொள்ளை அடித்துப் பொருள் குவிப்பது, முதலில் பெரிதாகத் தோன்றினாலும் அந்தச் செயல் ஏற்கனவே இருந்த சொல்வத்தையும் அடித்துக் கொண்டு போய்விடும் என்கிறார். மற்றவர்களைச் சுரண்டி வாழுகின்ற செயலானது முறையற்றது என்னும் பொதுமைக் கருத்தைத் திருவள்ளுவர் இக்குறள் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

"பிறர் படும் துயரத்தைப் போக்க முடியாத ஒருவன், அவ்வுயிரின் துயரத்தை தானும் ஏற்று அனுபவித்தால் ஒழிய, ஒருவன் தன்னை மெய்யறிவுடையவன் என்று கூறிக்கொள்ள முடியாது என்பதே குறள் காட்டும் வாழ்க்கை நெறி. இதை மறந்துவிட்டு எவற்றை எல்லாமோ நாம் இன்று 'அறிவு' என்று சொல்லிக்கொண்டு திரிகிறோம். 'மற்றோர் உயிரின் நோயைத் தன் நோய் போலப் போற்றி அனுபவிக்காவிட்டால் அறிவு பெற்றதனால் பயன் என்ன?'

என்னும் பொருளில்,

*"அறிவினால் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய்*
*தன்னோய்போல் போற்றாக் கடை?*

என்ற கூறுகிறது குறள். இதை குறள் கண்ட வாழ்வு' என்னும் நூலில் திரு.அ.ச.ஞானசம்பந்தன் விளக்கியுள்ளார்.

*"விருந்து புறத்தாற் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"*

என்ற குறளும்

*"பகுத்துஉண்டு, பல் உயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"*

என்ற குறளும் இயம்புவதை நோக்குவோம். விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று என்று முதலில் சொன்னவர், தான் உண்ண இருப்பதனைப் பசித்த உயிர்கள் அனைத்திற்கும் பகுத்துக் கொடுத்து உண்ணச் செய்து அனைத்து உயிர்களையும் காத்தல் அறநூலுடையார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாயதாகும் என்று அடுத்த குறளில் சொலல்லியுள்ளார். 'பகிர்ந்து உண்ணல்' என்னும் பொதுமைக்கருத்து இங்கு வேரூன்றியுள்ளதை அவதானிக்கலாம்.

*" இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு"*

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. திட்டமிட்டுச் செயற்படுவது என்பது பொதுவுடமைக் கருத்தாகவே இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள"*

தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவி அழைத்துக் காக்கை உண்ணும் அந்தக்குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு.


*"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருந்தக் கூலி தரும்"*

கடவுளே என்று கூவி அழைப்பதால் நடக்காத காரியம், ஒருவர் முயற்சியுடன் உழைக்கும்போது அந்த உழைப்புக்கேற்ப வெற்றியைத் தரும். உழைப்பின் பெருமை இக்குறளில் உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது உற்பத்தியின் முக்கியத்துவம் இங்கு கூறப்பட்டுள்ளது. திருவள்ளுவர் தந்த அநேகமான குறள்கள் சமுதாய நன்மை நோக்கிய அர்த்தமுள்ள பொதுமைக் கருத்துக்களைத் தாங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது.



46 ஆம் பக்கம் பார்க்க .......

# வன்னி மண்ணின் மைந்தன் - கலாநிதி முல்லைமணி



கலாநிதி முல்லைமணி 13.12.2016ம் திகதி காலமான செய்தி கேட்டு கல்விச் சமூகத்தினரும் இலக்கியவாதிகளும் அதிர்ச்சியால் உறைந்துபோயினர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளைக் கிராமத்தில் வேலுப்பிள்ளை தம்பதியினரின் மகனாக 03.05.1933இல் பிறந்த சாகித்தியரத்னா முல்லைமணி அவர்கள், தமது ஆரம்பக் கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்ட பின் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்று தமிழில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியர், அதிபர், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை அலங்கரித்து 1993ஆம் ஆண்டு அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள தமிழிலக்கிய முன்னோடிகளில் மூத்தவராகிய இவர் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை ஆகியவற்றில் பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தார். இவரது இலக்கியச் சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும். மத்திய அரசின் கலாசார அமைச்சு இவருக்கு கலாபூஷணம், சாகித்திய ரத்னா போன்ற விருதுகளை வழங்கிக் கௌரவித்தது.

பண்டாரவன்னியன் உலாவித் திரிந்த வீரம் விளைந்த ஒட்டுசுட்டான் மண்ணிலே தனக்குரிய மனையாளைத் தேடிக் கொண்ட இவர் பண்டாரவன்னியன் புகழைப் பாரெங்கும் பரப்பியவர்.

மண்மூடிக் கிடந்த பண்டாரவன்னியன் வரலாற்றை மீள எழுதியதோடு நாடக உருவிலும் வெளிக்கொணர்ந்தார்.



ஆபாச இலக்கியங்களிலும், சினிமா மாயையிலும் மூழ்கிக் கிடந்த எமது மக்களைத் தட்டியெழுப்பி ஈழத்து இலக்கியம், வன்னி இலக்கியம் ஆசிய கோட்பாடுகள் பற்றி மக்களுக்குப் புரியும் வகையில் எளிமையாக எடுத்துரைத்தவர் அமரர் முல்லைமணி அவர்கள். இவரது மரணமானது வன்னிப் பிரதேச மக்களுக்கோ அல்லது வடக்க கிழக்கு மக்களுக்கோ ஏற்பட்ட தனிப்பட்ட இழப்பல்ல. மாறாக உலகம் முழுவதும் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அமரர் முல்லைமணியவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர ஏனைய இலக்கிய வாதிகளும் கல்வியாளர்களும் முன்வர வேண்டும். அதுவே அன்னாருக்கு நாம் கொடுக்கக் கூடிய உண்மையான கௌரவமாகும். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

- கணுக்கேணியூர் கா.தவபாலன்

ஆனந்தி

# தமிழும் தலை வணங்கும் ஒரு தவப் புதல்வன்



கலை ஞான ஒளியில் கண் திறந்த பெரியோன் அலை பாயும் மனம் அடங்கி இசை வழி இறைவனையே கண்டு உணரும் இனிய தமிழ் மகன்

சத்திய வாழ்க்கையின் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்ற இருப்பு நிலை கழன்று போய் தெய்வீகக் களை இழந்து கானல் தீயில் மூழ்கியே அழிந்து ஒழிந்து போகும் எங்கள் பெருமைக்குரிய தமிழ் மண்ணை உயிர் ஒளியோடு மீட்டெடுத்து புதிய வார்ப்பாகச் செதுக்கி எடுத்துக் கண் குளிரத் தரிசிக்கும் ஆவலின் விளைவாகவே கலை வழிபாடு என்ற எனது இந்த மேலான எழுத்துத் தவம் எங்கே கலை உயிர்த்து உள் நின்று பிரகாசிக்கும் ஒளி வடிவமாக எனது கண்களுக்குத் தரிசனமாகிறதோ அங்கெல்லாம் கடவுள் தரிசனத்தையே கண்டு கரம் கூப்பி வணங்க நான் தவறுவதில்லை அப்படி எனக்குள் நேர்கிற கலை வழிபாட்டுத் தவத்தினூடாக இந்த மண்ணின் ஒப்பற்ற தவப் புதல்வனாக கலைத்துவப் பெருமைகளுடன் வாழ்க்கை வேள்வி நடுவே ஒளி விட்டுப் பிரகாசிக்கும் ஒரு சகலகலா வல்லவனை இனம் கண்டு அவரை என் எழுத்து மூலம் உலகறியச் செய்யும் எனது ஆத்மார்த்தமான சத்திய மனதின் உயிர் மூச்சுக் குன்றாத ஓர் ஒளிப் பிரகடனமாகவே அவரின் கலை வழிபாடான பெருமைகளைக் கூறும் எனது இந்தக் கட்டுரை ஆக்கம் கண் மலர்ந்து உங்கள் முன் வருகின்றது

சிவப்பிரகாசம் சக்திதரன் என்பது இவரின் முழுப் பெயர் சிவ சக்திதரன் ஏழாலை சக்தி என்றால் பலரும் அறிவார்கள் இவர் எங்கள் மண்ணின் தவப் புதல்வன் மட்டுமல்ல எனது ஊராகிய எப்போதுமே தனக்கு இயல்பாகி விட்ட தெய்விகக் களை கொண்டு பிரகாசிக்கின்ற ஏழாலை மண்ணிலே தோன்றிய ஒரு மாபெரும் கலை விருட்சம் இவர். சிறுவயதில் ஒரு சிறந்த மேடை பேச்சாளனாகவே இவரை நான் இனம் கண்டிருக்கிறேன் கணீரென்ற குரல் வளத்தோடு சரளமான தமிழில் இவர் பேசுவதை மெய் மறந்து கேட்டுக் கொண்டேயிருகலாம் சமீபத்தில் இவரின் முக நூல் வழியாக நான் அறிந்திராத இவரது கலை வழிபாடாகவே மாறிவிட்ட தெய்வீக வாழ்க்கையின் தரிசன வாழ்வியல் ஒளிச் சுவடுகளை நான் மிகவும் மன நிறைவோடு தரிசிக்க நேர்ந்தது இவர் மிகச் சிறுவயதிலேயே கலாபூஷணம் க.ப சின்னராசா அவர்களிடம் முறையாக மிருதங்கம் கற்று வட இலங்கை சங்கீத சபையால் மிருதங்க கலாவித்தகர் பட்டம் பெற்றுக் கலை வானில் பிரகாசிக்கும் ஒளி நட்சத்திரம் இவர் முறையாக ஓதுவாரிடமும் தேவார பண்ணிசை பயின்று அதிலும் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர் நோர்வேயில் ஆர்யாலயா என்ற ஒரு மிருதங்க இசைக் கல்லூரியின் இயக்குநராகவும் கை தேர்ந்த இசைக் கலை நுட்பம் அறிந்த விரிவுரையாளராகவும் இவர் பணியாற்றி வருகின்றார் நோர்வே நுண்கலை மன்றத்தின் ஆலோசகர்களில் ஒருவராகவும் இவர் இருக்கிறார் மேலும் இவர் ஒரு சிறந்த பாடகன் கஞ்சிரா மோர்ஸிங் தபேலா போன்ற வாத்திய இசைக் கருவிகளை மீட்டுவதிலும் இவர் ஒரு கை தேர்ந்த வித்தகர் தபேலா என்ற வாத்தியத்தை தமிழ் நாட்டின் பிரபல இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா அவர்களின் இசைக் குழுவில் ஒரு முதல் நிலை இசைக் கலைஞராக இருக்கும் மது என்பவரிடம் முறையாகத் தபேலா கற்றுத் தேறிய இசை அனுபவ ஞானத்தில் புடம் போடப்பட்டுப் பல விருதுகள் பட்டங்கள் பெற்றுப்

பிரகாசிக்கும் இவரின் கலை வாழ்க்கையின் தனித்துவப் பெருமைகள் பற்றி இன்னும் நிறையவே கூற முடியும் கொழும்பு லய நாதலயாவின் இயக்குனரான திரு வேனிலான் அவர்களால் 2015 ல் இவருக்கு லய நாத சுரபி என்ற பட்டம் வழங்கப்பட்டது 2002 ல்போர் நிறுத்த சமாதான காலத்தில் ஏழாலை இந்து சமயப் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்டு நடந்தேறிய சமாதானப் போர் இசை என்ற நிகழ்வில் நோர்வேயிலிருந்து ஓர் இசைக் கலைஞனக இவரும் வந்து கலந்து கொண்ட போது அதன் தலைவர் அருட்கவி திரு வினாசித்தம்பி ஐயா அவர்களால் தெய்வ லய சுரபி என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது 2016 ல் சென்னையில் நடந்த மதுர கானா லயாவின் ஸ்ரீ ஸத்குரு தியாகராஜா ஸ்வாமிகளின்இசைக் கல்லூரி ஆராதனை நிகழ்வில் இசைக் கலைஞர்களாகப் பங்கு பற்றிய கர்நாடக இசைப் பாடகிகளான சின்மயா சகோதரிகள் உட்பட இன்னும் பல முன்னனிக் கலைஞர்களில் ஒருவராக நோர்வேயிலிருந்து இவரும் போய்க் கலந்து கொண்டது மறக்கவே முடியாத ஒரு சிரஞ்சீவி அனுபவம் இவருக்கு இவரோடு எங்கள் மண்ணுக்கும் தான் இது ஒரு தனிப் பெருமை இக் கல்லூரி மாணவர்கள் இசைக் கச்சேரி செய்த போது பக்கவாத்தியம் வாசித்துச் சிறப்பித்ததால் பொன்னாடை போர்த்தி இவர் கௌரவிக்கப்பட்டார் 2012 ல் அவுஸ்திரேலியாவில் நடந்த மிருதங்க அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராக வந்து கலந்து கொண்டு சிறப்பித்தது மாத்திரமல்ல அழகான தமிழ் மொழி அழியாது உலகிலே உலகெங்கும் தமிழ் வாழுமே என்ற பாட்டெழுதி இவர் இசையமைத்துக் கொடுத்த பாட்டை இந்திய பிரபல இளம் பாடகர் காசிப்ஜாப் மகேஷ் அவர்கள் பாடி மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றதும் இவரின் உன்னதமான இசைப் பயணத்தின் சாதனை வெற்றிகளில் இதுவும் ஒன்றாகும் சுருக்கமாகக் கூறுவதானால் காலத்தையே கலையால் வென்று நிற்கும் இவர் ஒரு சிரஞ்சீவிக் கலைஞர் சிறந்த நடிப்புத் திறன் கொண்ட ஒரு முன்னிலைக் கலைஞனாக இலங்கை வானொலியிலும் தடம் பதித்த ஈடில்லாப் பெருமைக்குரியவர் இலங்கையிலேயே சிறந்த நாடக இயக்குனராக விளங்கிய மறைந்த கே எம் வாசகர் அவர்கள் எழுதி அரங்கேற்றிய பல நாடகங்களில் நடித்து வெற்றி வாகை சூடிய ஓர் உன்னத கலைஞர் இவர் மேலும் ஆர் இராஜேஸ்வரன் சீ சண்முகவடிவேல் ஆகிய இருவராலும் எழுதி இயக்கப்பட்ட சமூக சரித்திர நாடகங்களிலும் நடித்துத் தனக்கென தனி முத்திரை பதித்த பெரும் சாதனையாளர் இவர் மேலும் 2016ல் கொழும்பு றோயல் கல்லூரியில் பாடசாலைகளுக்கிடையே நடந்த கர்நாடக இசைப் போட்டிகளின் நடுவராக இருந்து பணியாற்றிய தன்னிகரற்ற பெருமைக்குரியவர் இவர்



இவற்றையெல்லாம் விட இன்னுமொரு சிறப்புத் தகுதி இவருக்குண்டு இவர் ஒரு படிப்பு மேதை இலங்கை திறந்த வெளி பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றவர் இதற்கு மேலாக நோர்வே அக்டர் பல்கலைக் கழகத்தில் ஒரு கணணிப் பொறியிலாளராகப் பட்டம் பெற்று உயர்ந்த பெருமைக்குரியவர் இப் பெருமைகளுக்கும் அப்பால் உள்ளுலகில் கண் திறக்கும் பரந்து விரியும் அன்பு வேள்வியின் ஒரு சாட்சி புருஷனாகவும் இவர் செய்யும் மனித நேயத் தொண்டுகளின் வழியாக இவர் எடுத்து நிற்கிற விசுவரூப தரிசன ஒளியே போதும் இவர் ஒரு மிகப் பெரிய சமூகத் தொண்டன் என்பது உலகறிந்த ஓர் உண்மை சரிந்து வீழும் எங்கள் ஆன்மீக வாழ்க்கையின் உயிர்த்துவப் பெருமைகளைச் சரிந்து வீழ்ந்து மடிந்து போகாமல் கட்டிக் காப்பதற்கு இது போதும் ஊரில் வாழ்ந்த காலத்தில் இவர் ஆற்றிய சமூகப் பணிகள் சிரம தானங்கள் ஏராளமுண்டு ஊரில் விவசாய கழகங்கள் போன்ற பல கழகங்களில் தலவனாகவும்

இருந்து பணியாற்றிய பெருமை இவருக்குண்டு மறைந்த அரசியல் தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்கள் கலந்து கொண்ட ஊரில் நடந்தேறிய ஒரு மகா நாட்டுக்குத் தலைவனாகவும் இவர் சபையை வழி நடத்திப் பேசிய தலைமையுரை அத்துணை சொல் வளத்தோடு கம்பீரமான கணீரென்ற குரலில் இவர் பேசியவையெல்லாம் மறக்கவே முடியாத



ஒரு சகாப்த காவியமாக மனதில் நிலைத்து நிற்பதாக நான் உணர்கிறேன் சங்கீதம் பரதம் என்ற கலைகளுக்காகக் காசையே குறி வைத்துப் பிழைப்பு நடத்துகின்ற சாதாரண மனிதர்கள் நடுவே எந்த ஒரு பிரதிபலனும் எதிர்பாராமல் சிறு குழந்தைகளுக்கு நோர்வேயிலும் நமது நாட்டிலும் இலவசமாகவே இதை ஒரு புனிதமான கலைத் தொண்டுபோல் கருதி மிருதங்கம் கற்றுக் கொடுத்து ஒரு கர்மயோகியாய் இருந்து கலை வழிபாடு செய்யும் இவரை கலை வானில் தன்னிகரற்ற பெருமைகளோடு பிரகாசிக்கும் துருவ நட்சத்திரமாகவே இனம் கண்டு கொண்டாட வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்குண்டு

வெள்ளை மண்ணில் மறை பொருளாகவே காட்சி மயக்கம் கொண்டு மனக் கண்ணிழந்த வெறும் மனிதர்களாய் காட்டில் விடப்பட்ட தனிமையிலேயே வாழ்ந்து மடிந்து போகும் புனிதமான தமிழ் கலாசார விழுமியங்களையே அடியோடு மறந்து விட்ட தமிழர்களிடையே பூரணத்துவமான கலை வழிபாடு ஒன்றே வாழ்க்கையின் ஒப்பற்ற குறிக்கோள் தவமாகிக் கறைகள் ஒழிந்து போன தெய்வீக மண்ணில் பிறந்து வாழ்ந்த களை மாறாமல் வரும் புகழையோ பொருளையோ துச்சமாக மதித்துக் கலை வழிபாடு ஒன்றையே வாழ்க்கையாகக் கொண்டாடும் இம் மாபெரும் கலைஞனை இனம் கண்டு நான் மட்டுமல்ல சிரஞ்சீவிப் பெருமைகளுடன் அழியாமல் இருக்கும் தமிழும் தலை வணங்கும் தமிழ் என்றாலே புனிதமான ஒரு தெய்வீக நினைப்புத்தான் தமிழை நினைத்தால் இருளின் மறை பொருளான வாழ்க்கையின் காட்சி மயக்கத் தடங்களே அடியோடு மறைந்து போய் மிகவும் சாந்நித்யமான தெய்விக இருப்பு நிலை ஒளி தரிசனமே எங்கள் கண்களில் களை கட்டித் தோன்றும் என்பதே சாசுவதமான உண்மை உண்மையின் உயிர்ச் சுவடு படாத மற்றவையெல்லாம் வெறும் நிழல்களே அதுவும் உயிர்களைக் குடிக்கவென்றே கங்கணம் கட்டிக் கொண்டு உழலும் குரூர நிழல்கள் தாம் இவைகளெல்லாம் உயிர்க் கொலைகளையே மறந்து மேற்கூறிய தெய்வீக சத்திய இருப்பு நிலையின் உதாரண புருஷர்களாக நாம் மாறுவதற்கே தமிழ் என்ற புனிதமான உயிர் வழிப்பாதை நமக்கெல்லாம் இதைக் காட்சி நிறைவாகக் கண்பதற்கே இந்தக் கலை வழிபாடு என்பதை வெளிப்படையாகவே எங்களால் உணர முடியும் கலை வழிபாடு என்று வரும் போது கண்ணை மூடித் தவம் செய்கின்ற நிலை தான் அப்படிக் கலை வழிபாடு செய்கிற அனைவரையும் தமிழ் தலை வணங்கி நின்றால் அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது கலை வழி உயிரின் ஒப்பற்ற பெருமைகளுக்கே தன்னை அர்ப்பணித்து வாழும் திரு சிவ சக்திதரன் அவர்களை தெய்வ சாந்நித்யத்தில் ஒளி கொண்டு பிரகாசிக்கும் ஓர் ஆதர்ஸ புருஷனாகவே இனம் கண்டு தேறிய ஆன்மீக சத்தியமான பெரும் மகிழ்ச்சியின் விளைவாகவே அவரை பற்றி விரிவாக ஒரு சிறப்புக் கட்டுரை என் எழுத்துத் தவத்தின் மூலம் கண் திறந்து காட்சி நிறைவாக உங்கள் முன் வருகின்றது கலை மூலமாகத் தவம்

செய்கிற வாழ்க்கையென்ற சத்திய வேள்வி உயிர் மங்காமல் அதே பழைய தெய்வீகக் களையுடன் கொஞ்சமும் உரு மாறாமல் உயிர்த்து எழ இது போதும் இனிய பாட்டிசைக்கும் கலைஞனாக இருப்பதோடு சகல வாத்தியங்களையும் பூரணமாகக் கற்றதன் பலனாக இசை வானில் தெய்வீக நிலை காணும் ஒரு வழிபாட்டு நாயகனாக ஒளி கொண்டு பிரகாசிக்கும் இவரின் புகழ் மங்காத சாசுவதப் பெருமைகளை ஒரு வேத பிரகடனமாக வெளிப்படுத்தி உலகுக்குச் சொல்லும் முகமாகவே எனது இந்தக் கட்டுரையும் களம் கண்டது இவரின் உன்னதமான கலை வாழ்வின் சிறிதும் தடம் புரளாத மாசற்ற பெருமைகளை எனது புனிதமான எழுத்துத் தவத்தின் மூலம் உலகறிய எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற உள்ளார்ந்த உயிர் தீர்க்கமான எனது ஆன்மீக நிலைப்பாடு இறைவன் அளித்த ஒரு மேலான தெய்வீக வரமாகவே என்னை வந்தடைந்தது இதன் கலை வழிபாடாகவே தோன்றுகின்ற மெய்யான இருப்பு நிலையை புனிதமான கலை வழிபாடு ஒன்றுக்காகவே பத்திரிகையுலகில் ஓர் ஆதர்ஸ நாயகனாகவே முடி சூடிப் பவனி வரும் தாயக ஒலி ஆசிரியர் எனது பெருமதிப்புக்குரிய திரு தம்பு சிவா ஐயா அவர்கள் உள்ளபடி இனம் கண்டு பிரசுரிக்க முன் வந்ததை எனது நெடுங்கால எழுத்துத் தவத்துக்குக் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரமாகவே நான் உணர்கின்றேன் கலை வழிபாடாகவே காட்சி தரிசனமாகி என் கண்களை நிறைக்கும் அவரது கறைகள் கடந்த அப்பழுக்கற்ற ஒளி விசுபரூப நிலை கண்டு கரம் கூப்பி வணங்குவதோடு நன்றி கூறவும் நான் பெரிதும் கடமைப்பட்டவள் விளம்பரங்கள் ஏதுமின்றிக் கலை வானிலே கொடி கட்டிப் பறக்கும் திரு சக்திதரன் அவர்களுக்கு இது மேலும் ஒரு வெற்றி பாதை விளம்பரங்கள் இல்லாமலே கலை வழிபாட்டு வாழ்க்கையின் ஒரு மிகப் பெரிய சாதனை நாயகனாய் புகழ் கொண்டு பிரகாசிக்கும் அவரின் இசைப் பயணத்துக்கு எனது இந்தக் கட்டுரை மேலும் ஒரு திருப்புமுனை. நான் ஒரு மேலான இறை தொண்டாகக் கருதித் திறந்து விட்ட இந்த வாசலினூடாக தன்னிகரற்ற தனிப் பெரும் இசை மேதையாய் அதீத இசை ஆளுமை கொண்ட களை கட்டி நிற்கும் ஒரு கம்பீர புருஷனாய் அவரை இனம் கண்டு தரிசிக்கும் பெரும் பேறு இறையருளால் நமக்குக் கிட்டுமென நான் நம்புகின்றேன்

ஆகவே இதை எல்லோரும் வாசித்துக் கலை வழிபாடு செய்த மன நிறைவுடன் இவரை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு கூறி இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன் வாழ்க தமிழ் என்றும் நிலைத்து நிற்கும் சிரஞ்சீவிப் புகழோடு வாழ்க வளர்க அவரின் மிகவும் புனிதமான கலை வழிபாடும் இசைப் பயணமும்.

## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா : ரூபா 900(அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு : $30(U.S), £20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

| திருமலை பாலா | வங்கிக் கணக்கு விபரம் |
|---|---|
| (Thirumalai Bala) | T.Sivasupramaniam |
| London | A/C No : 8100086490 |
| 07956486014 | Commercial Bank |
| | Wellawatte, Sri Lanka |

திருக்கோயில் யோகா யோகேந்திரன்

# எனக்கொரு அப்பா வேணும்

நள்ளிரவில் திடீரெனக் கண்விழித்து அழுது ஆர்பாட்டம் பண்ணிய மகனை அரவணைத்து ஆறுதல் கூறி ஒருவாறாகத் தூங்க வைத்த ராஜி என்கின்ற ராஜலட்சுமியின் தூக்கம் அவளைவிட்டு எங்கோ தொலைந்து போனது.

உணவுப் பொருட்களைக் கேட்டால் வாங்கிக் கொடுக்கலாம்; விளையாட்டுப் பொருட்களைக் கேட்டால் வாங்கிக் கொடுக்கலாம்; கொப்பி புத்தகம், உடுப்பு என்பவற்றைக் கேட்டாலும் பிரச்சினை இல்லை எப்பாடுபட்டாவது வாங்கிக் கொடுக்கலாம்; ஆனால் மகன் கேட்பது ஒரு அப்பா! "எனக்கொரு அப்பா வேணும்! வாங்கித் தாங்கோ" இதுதான் அவனது அண்மைக்காலப் பல்லவி.

நெடுங்கேணிக்கு வந்து மூன்றாம் வகுப்பில் சேர்ந்து விட்டபின் தான் அவனது இந்த நச்சரிப்புத் தொடங்கியது. முல்லைத்தீவில் முதலாம் இரண்டாம் வகுப்புக்களில் படித்த போது எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அவனும் அவன் பாடுமாக இருந்தான். பாடசாலைப் புதினங்கள் பற்றியும் தன் அழகான அபர்ணா மிஸ் பற்றியும் விழிகளகலப் பேசிக் கொண்டு புத்தகங்களும் படிப்பும் விளையாட்டுக்களுமே உலகம் என இருந்தவனுக்கு என்னதான் நடந்ததோ தெரியவில்லை. அடிக்கடி "அப்பா வேணும்" "அப்பா வேணும்" என்கிறான். அவளும் பல விதமாக நிலைமையை அவனுக்குப் புரிய வைக்க முயன்றாள். புத்திமதிகள் சொன்னாள்; ஏசினாள்; அதட்டினாள்; அவனோடு சேர்ந்து தானும் அழுதாள். அவன் எதற்கும் செவி சாய்க்கவில்லை. போதாக் குறைக்கு இப்போ நித்திரையில் எழுந்து படுத்துகிறான்.

சென்ற வாரத்தில் ஒருநாள் மகனின் வகுப்பாசிரியை சிவகாமி, ராஜியைப் பாடசாலைக்கு வந்து போகுமாறு சொல்லியனுப்பியிருந்தார். ராஜி பாடசாலைக்குப் போன போது சிவகாமி ரீச்சர் சொல்லிய விடயம் ஒரு பக்கம் அவளது மனசை உறுதிக் கொண்டிருந்தது.

ராஜியைத் தனியாக அழைத்த ஆசிரியை, அவளிடம் கேட்ட முதற்கேள்வி "உனக்கு எத்தனை வயது பிள்ளை?"

"எனக்கு முப்பத்துமூணு வயசு ரீச்சர். ஏன் கேக்கிறியள்?"

பிள்ள ராஜி, எனக்கு இப்ப அம்பத்தாறு வயசாகுது. உனக்கு அம்மாவாக இல்லாட்டி, அக்காவாக இருக்கக் கூடிய வயசு. அதனால உன்னட்ட ஒரு விசயம் கேட்கலாமெண்டு நினைக்கிறன்."

"கேளுங்க ரீச்சர்"

"நீ ஏன் பிள்ள ஒரு கலியாணம் செய்யக் கூடாது?"

"ஐயோ ரீச்சர்! நீங்க என்ன கேக்கிறீங்க? எனக்கு அந்த எண்ணமே இல்ல ரீச்சர். என்ர மகனப் படிப்பிச்சு ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வாறதைத் தவிர வேற எந்த எண்ணமும் எனக்கில்ல. தயவு செஞ்சு இப்படியெல்லாம் கேட்காதீங்க ரீச்சர். மனசுக்கு மிச்சம் கவலையாக் கிடக்கு."

"பிள்ளை ராஜி! எனக்கு உன்னக் கவலைப்படுத்திப் பார்க்கிறது என்ற நோக்கமில்லை. உன்ர மகன் படிச்சு நல்ல நிலை

மைக்கு வரவேணுமெண்டதாலதான் நான் இதைச் சொல்லுறன்."

"என்ன ரீச்சர் சொல்லுறீங்க?" குழப்பத்துடன் கேட்டாள் ராஜி.

"ஓமம்மா. உன்ர மகனுக்கு மனசில தனக்கு அப்பா இல்லை என்கிற ஏக்கம் கடுமையாக இருக்கு. சில வேளை எதையோ பறிகுடுத்த மாதிரி இருக்கிறான். மற்றப் பிள்ளையள் ஓடியாடி விளையாடிடுதுகள். இது எனக்குச் சரியாப் படல்ல. அவன்ர வகுப்புப் பெடியளக் கூடிப்பிட்டு இவனைப் பற்றி விசாரிச்சன். " அவனக்குக் கொஞ்ச நாளா அப்பாப் பைத்தியம் மிஸ்" எண்டு சிரிக்கிறாங்கள். அவனத் தனியாக் கூப்பிட்டுக் கதச்சுப் பாத்தன். அவன்ர மனநிலை நல்லா விளங்குது. தனக்கொரு அப்பா இல்லை என்கிற ஏக்கம் அந்தப் பிஞ்சு மனசில உறைஞ்சுபோய்க் கிடக்கு. அது அவன்ர மனசை மட்டுமில்ல அவன்ர படிப்பையும் அவன்ர உடம்பையும் கூடப் பாதிக்கும். உனக்கும் சின்ன வயது தானேம்மா? நீ ஒத்துக் கொண்டால் விதவைகளக்கு மறுவாழ்வு அமைச்சுக் குடுக்கிற ஒரு அமைப்பு மூலமாக உனக்கொரு கலியாண ஒழுங்கை ஏற்பாடு செய்யலாம். பிள்ளைகளுக்காக வாழுறதெண்டால் அவையளுக்கு சாப்பாடு, உடுப்பு, படிப்பு குடுக்கிறது மட்டுமில்லம்மா அவங்கட மனசையும் கவனிக்க வேணும்.

ராஜி அழத்தொடங்கிவிட்டாள். ரீச்சர் நான் விதவையெண்டு எப்படிச் சொல்லுறது? நாங்க முகாமில இருக்கிறபோது விசாரிச்சுப் போட்டு விடுவதாகச் சொல்லித்தான் ஆமிக்காரங்கள் அவரைக் கூட்டிக்கொண்டு போனவை. அப்ப என்ர மகனுக்கு ஒன்றரை வயது. அவர் பிடிபட்டு கிட்டத்தட்ட ஆறு வருசமாகக் போகுது. இதுவரையில் அவரைப் பத்தின எந்தத் தகவலும் கிடைக்கல்ல. இருந்தாலும் அவர் எங்காவது உசிரோட இருப்பார் எண்டுதான் நான் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறன். இந்த மனநிலையில் நான் இன்னொரு கலியாணம் செய்யிறதப் பத்தி எப்படி ரீச்சர் நினைக்கிறது?"

"நீ சொல்றது சரிதான் ராஜி. உன்ர பிள்ளையும் பாவம். நீ நல்லா யோசிச்சுப்பார்! உன்ர புருசன் உயிரோட இருந்தா நல்லதுதான். ஆனால் எப்பிடி? இதுவரையில எந்தத் தகவலுமில்ல. புனர்வாழ்வு குடுத்து வெளியில விட்ட ஆக்களோடையும் அவர் இல்ல. சிறையில் இருக்கிற ஆக்களோடையும் இல்ல. அவர் உயிரோட எங்கயாச்சும் இருந்திருந்தா இது வரையில் உன்னைத் தேடிக் கண்டுபிடிச்சு வந்திருக்க வேணும். இதில எதுவுமே நடக்காத போது நீ அவருக்காகக் காத்திருப்பது, கடைசியில் உன்ர மகன்ர மனசையும் அவன்ர எதிர்காலத்தையும் தான் பாதிக்கும். வேறென்ன நான் சொல்லுறது? இப்ப நீ வீட்டுக்குப் போ. ஆறுதலாக யோசிச்சு நல்ல முடிவாய் எடு. இந்த விசயத்தில நான் உனக்கு உதவி செய்ய முடியும்."

ராஜிக்கு சிவகாமி ரீச்சர் கூறிய காரணங்களின் நியாயம் புரிந்த போதும் மகனின் பரிதாப நிலை விளங்கிய போதும் மனசு இன்னுமொரு திருமணத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கவும் சங்கடப்பட்டது.

பிரகலாதன் எப்பேர்ப்பட்ட கணவன்? அவனுடன் வாழ்ந்த அந்தக் குறுகிய கால வாழ்க்கையில் அவன் தன்னுடன் ஒரு தோழனைப் போலப் பழகியதையும் வீட்டில் நிற்கும் போது வீட்டு வேலைகளில், சமையலில் அவளுடன் பங்குகொண்டு ஒத்தாசையாக இருந்தத்தையும் உடம்புக்கு முடியாத போது பரிவோடு உதவியதையும் எல்லாவற்றிற்கும் மேலாக அவன் தன்னை ஒரு குழந்தையைப் போல் பராமரித்த கர்ப்பகால நாட்களையும் நினைத்து பார்க்கிறாள் ராஜி.

இவைகள் மட்டுமா? அங்குமிங்கும் அலைந்த அலைச்சல்களையும் அகதிகள் என்ற

பெயரில் பட்ட அவலங்களையும் மனச்சுமை, உடற்சுமை என்பவற்றோடு ஓடிய ஓட்டங்களையும் பசியும் பட்டடினியுமாகக் கழித்த உணவு வேளைகளையும் கூட அவளால் மறக்க முடியாது. இன்பத்திலும் துன்பத்திலும் தன் கணவன் கூடவே இருந்ததால் அவைகளெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

□ □ □

வன்னிப் பிரசேத்தின் நெடுங்கேணிக் கிராமத்து வளமான செம்மண் காணியில் சிறந்த முறையில் தோட்டம் செய்து கைநிறையப் பணத்துடனும் வீடு நிறைய விளைபொருட்களுடனும் மனசு நிறைய மகிழ்வுடனும் வாழ்ந்தனர் இராஜலட்சுமியின் பெற்றோர். தந்தை பொன்னுத்துரையும் தாய் செல்வநாயகியும் மனசொன்றிப் பாடுபட்டு உழைத்தனர். தலைமகளான ஜெயலஷ்மி சிறந்த பெறுபேற்றுடன் உயர்தரம் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்கையில் பஸ் குண்டு வெடிப்பில் அகப்பட்டு ஒரு மாதம் வரையில் உயிருக்காகப் போராடி, சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போனாள். இளையவள் ராஜலஷ்மி உயர்தரம் படிக்க ஆரம்பிக்கையில், சிறுநீரகக் கோளாறினால் அம்மா காலமானத்தைத் தொடர்ந்து அக்காவின் அகால மரணத்தின் பேரிழப்பால் மனமெடிந்து தன் உயர்கல்வியைத் தொடர மனமின்றி வீட்டிலிருந்தாள்.

அன்றைய காலகட்டத்தில் திருமணம் செய்யாமல் வீட்டிலிருக்கும் இளைஞர் யுவதிகளுக்குப் பாதுகாப்பு மிகக் குறைவு என்கிற நிலைமையொன்றும் இருந்ததால், தனது ஒன்றுவிட்ட சகோதரியின் மகனான பிரகலாதனை மகள் ராஜலஷ்மிக்கு திருமணம் செய்து வைத்தார் பொன்னுத்துரை. பிரகலாதனும் ராஜியும் உறவினர்களானதாலும் ஒரே பாடசாலையில் படித்தவர்களானதாலும் சிறுவயது முதலே ஆளையாள் புரிந்து கொண்டவர்களாகவும் அன்பு கொண்டவர்களாகவும் இருந்தனர்.

திருமணம் நடந்த இரண்டாயித்து ஆறாம் ஆண்டில் கடுமையான யுத்தச் சூழல் நிலவியது. நாடு சின்னாபின்னப்பட்டு மக்கள் அங்குமிங்குமாக அலைந்து திரிந்தனர். எந்த நேரத்தில் தம் உயிர் பறிக்கப்படுமோ என்கின்ற அச்ச உணர்வுடன் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தனர். அதே அச்ச உணர்வு தனது மகள் பற்றியும் மருமகன் பற்றியும் பொன்னத்துரைக்கும் ஏற்பட்டது. அவர்கள் இருவரையும் அழைத்து நிலைமை வர வர மோசமாகிக் கொண்டு போகுது பிள்ளையள், எந்த நிமிசத்தில் என்ன நடக்குமெண்டு தெரியாமக் கிடக்கு. நீங்கள் ரெண்டு பேரும் எங்கயாச்சும் போய் கெஞ்ச நாளைக்கு இருங்கோ" என்றார்.

"என்னப்பா சொல்லுறியள்? உங்கள இஞ்ச தனிய விட்டுப் போட்டு நாங்கள் போறதோ? அதெல்லாம் வேண்டாம்" மறுத்தாள் ராஜி.

"ஓம் மாமா, அப்படிப் போறதெண்டா நீங்களும் வாங்கோ மூண்டு பேரும் போவம். அல்லது இங்கேயே இருப்பம்" பிரகலாதனும் மறுப்புத் தெரிவித்தான்.

பொன்னுத்துரை விடவில்லை. பலவிதமாகவும் எடுத்துச் சொல்லி வற்புறுத்திக் கொஞ்சம் பணமும் கொடுத்து புத்தளத்திலுள்ள தன் நீண்டகால நண்பர் பாறூக் முதலாளி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

புத்தளத்தில் தங்கியிருந்தபோது ராஜி தந்தையைப் பற்றியே கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள். 'அப்பா பாவம்' 'அப்பா தனியாகக் கஷ்டப்படுவார்' என்றே புலம்பிக் கொண்டிருப்பாள். சிலவேளை அப்பாவை நினைத்து அழுவாள். பாறூக் முதலாளியின் மனைவி நஸீமா, ராஜியைத்தன் மகளைப் போல அன்பாகப் பார்த்துக்கொண்ட போதும் அவளால் அங்கு மனசொன்றி வாழ முடியவில்லை. அவளது மனோநிலையைப் புரிந்து கொண்ட பிரகலாதன் நடப்பது நடக்கட்டும் என்று மூன்று மாதங்கள்

முடிவதற்குள்ளாகவே ராஜியை அழைத்துக் கொண்டு நெடுங்கேணிக்கு வந்து விட்டான்.

ஊரில் பயிர் செய்வதிலும் ஏகப்பட்ட பிரச்சினைகள்! விதைகள் பெறுவதில் கஷ்டம். உரத்திற்குத் தட்டுப்பாடு. விளைபொருட்களை விற்பதில் சிரமம், இப்படி எத்தனையோ. நாடும் மக்களும் சீராக இருந்தாலல்லவா விவசாயமும் விற்பனையும் சீராக இருக்கும்?

நாட்டின் நாலா புறங்களிலும் பலவித மான அசம்பாவிதங்கள் தலைதூக்கின. ஒரு பிரதேசத்தில் ஏதாவதொரு சம்பவம் நடந்தால் அதன் எதிரொலி மற்றொரு பக்கம் தென்பட்டது. அப்பாவி மக்களே இனமத பேதமின்றி எல்லாப் பக்கமும் பகடைகளாயினர்.

இந்த நிலையில் இருண்ட வானில் தோன்றிய ஒளிக்கீற்றுப் போல ராஜி கருவுற் றாள். இந்தத் துன்பியல் வாழ்வில் அவர்கள் சலிப்புற்றிருந்த வேளையில் இந்த விடயம் அவர்களுக்குச் சந்தோஷத்தைக்கொடுத்த போதும் கூடவே நாட்டு நிலைமையின் அச்சுறுத்தல் உள்ளார்ந்த பயத்தையும் கொடுத்தது.

பிரகலாதன் தன் மனைவியை மிகவும் கவனமாகப் பார்த்துக்கொண்டான். கைவச மிருந்த நகைகளில் ஒவ்வொன்று அவ்வப்போது பணமாக உருமாற்றம் பெற்றது.

ராஜிக்கு உரிய காலத்தில், அழகான ஆரோக்கியமான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 'மதுசூதனன்' என்று பெயரிட்டனர்.

நிலைமை வரவர மோசமாகிக்கொண்டே வந்தது. பணத்தையும் எப்படியாவது புரட்டிக் கொண்டாலும் அத்தியாவசியப் பொருட்களைக் காண்பது முயற்கொம்பாயிற்று. குழந்தைக்கு ஒரு வயது அண்மித்த சமயத்தில் கடைக்கு ஏதோ பொருட்கள்வாங்கவென்று போன பொன்னுத்துரை எறிகணை வீச்சுக்குப் பலியானார்.

தந்தையின் திடீர் இழப்பை ராஜியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அம்மா தன்னை விட்டுப் போன பின் அவளுக்கு அந்தத் தாக்கம் தெரியாமல் அவளைப் பார்த்துக் கொண்டவர் அப்பா. அவரின் அன்பு, நேர்மை, பிறரை மதிக்கும் பண்பு, பிறருக்கு உதவுகின்ற மனப் பாங்கு என்பன அவளை அவ்வப்போது பூரிப் படையச் செய்யும். படிப்பு குறைவான போதும் அவரின் பரந்துபட்ட அறிவு அவளைப் பல தடவை வியப்படையச் செய்வதுண்டு. மொத்தத்தில் அப்பாவை அவளுக்கு மிகவும் பிடிக்கும். அவரின் பிரிவு அவளை வெகுவாக வாட்டி வதைத்தது.

☐ ☐ ☐

தந்தையை இழந்த பேரிழப்பை வீட்டோடு கிடந்து அனுபவிக்கவும் முடியாதபடி இருந்தது சூழ்நிலை. இடம்பெயர்ந்து செல்லும் மக்களோடு சேர்ந்து வெளியேற வேண்டிய இக்கட்டான நிலையில் முக்கிய பாவனைப் பொருட்கள், துணிமணிகள் என்பவற்றைப் பைசிக்கிளில் கட்டிக்கொண்டு பிரகலாதன் அதை உருட்டிச் செல்ல குழந்தையைத் தூக்கிக் கொண்டு பின் தொடர்ந்தாள் ராஜி.

உயிர் நிலை உறவுகள், வீடுவாசல், பொருள் பண்டங்கள் எல்லாவற்றையும் இழந்து ஏதிலிகளாக சொந்த நாட்டிலே அகதிகளாக உயிர்ப்பயம், பசி, தாகம், உடற்சோர்வு, மனச் சோர்வு என்பவற்றோடு ஊர் ஊராக அலைந்து விரும்பியோ விரும்பாமலோ இராணுவத்தினரி டம் சரணடைந்து மர நிழலிலும் தடுப்பு முகாமி லும் கொசுக்கடி, நுளம்புக்கடி சகிதம் அசுத்தம், நெருக்கடி, தொற்றுநோய் என்பவற்றிற்கு முகம் கொடுத்து ஆறு வருடங்களை ஆறு யுகங்களாகக் கழித்து விசாரணை என்கின்ற பெயரில் சரண டைந்த கையோடு இராணுவத்தினரால் அழைத் துச் செல்லப்பட்ட கணவனுக்கு என்ன நடந்த தென்றோ? அவன் உயிரோடு இருக்கிறானா இல்லையா? என்கின்ற எந்தத் தகவலும் தெரி யாத நிலையில் சொந்த இடங்களுக்குப் பஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டோரில் ஒருத்தியாக நெடுங்கேணிக்கு ஏழு வயது மகனுடன் வந்து சேர்ந்தாள் ராஜி.

வீடு சேதமாகிப் புதர்மண்டிக் கிடந்தது. பகலில் காணியைத் துப்புரவு செய்வதும் இரவில் பக்கத்துக் காணிச் சங்கரியக்காவோடு அவவின் குடிசையில் மகனும் தானுமாகப் போய்த் தங்கிக் கொள்வதுமாக இருக்கையில் இராணுவத்தின ரால் தற்காலிகக் கொட்டிலொன்று அமைத்துக் கொடுக்கப்படவே சற்று ஆறுதலாக இருந்தது. முல்லைத்தீவில் முதலாம் இரண்டாம் வகுப்புக் களை அரைகுறையாகக் கற்ற மகனை நெடுங்கேணிப் பாடசாலை மூன்றாம் வகுப்பில் சேர்த்துக்கொண்டது.

❐ ❐ ❐

சிவகாமி ரீச்சரின் ஆலோசனையை ஏற்கவோ, மகனின் விரும்பத்திற்குச் செவி சாய்க்கவோ அவளால் முடியவில்லை. மகன் இன்னும் கொஞ்சநாளில் நிலைமையைப் புரிஞ்சு கொள்வான். பிறகு பிரச்சினை இல்லை யென நினைத்துக்கொண்டாள் ராஜி. தன் மனசில் அங்கிங்கெனாதபடி நிறைந்திருக்கும் தன் கண வனைத் தவிர்த்து இன்னுமொரு திருமணத் தைத் தன் மகனுக்காகச் செய்ய நினைப்பதற்குக் கூட அவள் தயாரில்லை. இது பற்றிச் சிவகாமி ரீச்சரிடம் கண்டிப்பாகச் சொல்லி விட வேண்டு மெனத் தீர்மானித்துக் கொண்டாள் ராஜி.

விடிந்தால் நாளைக்கு வெள்ளிக்கிழமை. கோவிலுக்குப் போகவேணும் என நினைத்துக் கொண்டு படுக்கைக்குப் போனவளுக்கு சட் டென ஒரு எண்ணம் பளிச்சிட்டது. நாளைக்குப் பூரணை நாள். மதுவுக்கும் பள்ளிக்கூடம் இல்லை. அவனையும் கூட்டிக்கொண்டு வற்றாப்பளைத் தான்தோன்றியீஸ்வரர் கோவிலுக்குப் போக லாமே என்று!.

காலையில் தலைக்குக் குளித்து மகனை யும் குளிப்பாட்டி புறப்பட்டு பஸ்ஸில் கோவிலுக்குச் சென்றாள். எதிர்க்கடையில் பூசைப்பொருட்களை வாங்கியதும் மதிலோரக் குழாயடியில் கைக ளால் முகம் கழுவிக் கொண்டு கோவிலுக்குச் சென்று வணங்கித் தன் துயரங்களைத் தீர்க்குமாறு மனமுருக வேண்டினாள். அவளையறியாமலே கண்ணீர் பெருகியது. மகனுக்குத் தெரியாமல கண்ணீரைத் துடைத்துக் கொண்டவளாக பூசைப்பொருட் களை உரிய இடத்தில் ஒப்படைத்துவிட்டு வெளி வீதியிலுள்ள மரமொன்றின் மீது வந்து உட்கார்ந்து கொண்டாள். மதுவும் அவளுக்கரு கில் வந்து உட்கார்ந்தான். அவனிடம் இருபது ரூபா காசைக் கொடுத்து எதிர்ப்பக்கமாக இருந்த கடையில் ஏதும் வாங்கிச் சாப்பிடும்படி சொன் னாள் ராஜி.

"எனக்குத் தனியப் போகப் பயமாயிருக் கம்மா நீங்களும் வாங்கோ" மது. தாயின் கரம் பற்றி இழுத்தான்.

"சரி வாறன்" என்றபடி ராஜியும் எழுந்து மகனுடன் சென்றாள். அவர்கள் கடையை அண்மித்த போது அங்கு பூசைப் பொருட்கள் வாங்கிக் கொண்டு திரும்பிய இருவரை நேருக்கு நேராகச் சந்தித்த ராஜி. அந்த இருவரில் ஒருவருடைய கரங்களிரண்டையும் பற்றி எதுவும் பேசத் தோன்றாமல் கண்கள் கண்ணீ ரால் குளமாக சில விநாடிகள் அப்படியே நின் றாள். அவரும் எதுவும் போசமல் நிற்கவே தன் னைச் சுதாகரித்துக் கொண்டவளாக 'என்னப்பா என்னைத் தெரியல்லையா? நான் ராஜி. உங்களின்ர ராஜி. இவன் எங்களின்ர மகன் மதுசூதனன்" என்றாள் பரவசமும் படபடப்புமாக!

அவளது மகன் எதுவும் புரியாமல் மிரட்சியுடன் நின்றான். தன்னையும் மகனை யும் பார்த்த பின்பும் தான் விபரம் சொல்லியும் எதுவும் பேசாமல் நிற்கும் கணவனைப் பிடித்து உலுக்கி "ஏன் பேசாமல் நிற்கிறீங்க? எங்களை மறந்து போய் விட்டீர்களா? இவ்வளவு காலமும் எங்கு இருந்தீங்க" சரமாரியாக அவள் ஏதோ வெல்லாம் கேட்க அவன் சிரித்துக்கொண்டு ஏதுவும் போசமல் நிற்கவே அருகில் நின்ற மற்ற வரிடம் "இவர் ஏன் பேசாமல் நிற்கிறார். இவ ருக்கு என்ன?" என்ற கேட்டாள் கலவரத்துடன்.

"தங்கச்சி பயப்படாதீங்க. இவர் எங்க ளோடு தடுப்புக் காவலில் இருந்தவர். உங்களை யெல்லாம் நினைச்சதாலயோ என்னமோ கொஞ்சம் மனநிலை பாதிக்கப்பட்டுப் போனார். இவர் ஒரு வாரம் மட்டில் ஆஸ்பத்திரியில இருந்தவர். எங்களுக்குப் புனர்வாழ்வு பயிற்சி முடிஞ்சபிறகு இவரை நான்தான் பொறுப் பெடுத்து வீட்டிற்கு கூட்டி வந்தநான்"

"அப்போ இவர் பேசமாட்டாரா?"

"பேசுவார். ஆனா முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவார். பழைய விசயங்கள் நினைவில் இல்ல. அவர் கலியாணம் கட்டின விசயமோ எங்களுக்குத் தெரியாது."

"ஐயோ கடவுளே! அந்த ஆமிக்காரனுகள் தான் இவரை இந்த நிலைமைக்கு ஆக்கியிருக்க வேணும்" அழ ஆரம்பித்து விட்டாள் ராஜி.

"அழாதம்மா. இவருக்குப் பெரிய பாதிப் பில்லையாம். இவர் முன்னம் பழகிய இடங்களுக் குக் கூட்டிக் கொண்டு போய் அறிந்த தெரிஞ்ச ஆக்களோடு பழகவிட்டால் கெதியில சரியாகிப் போவாராமெண்டு மனநல டாக்குத்தர் சொன்ன வர். இல்லாட்டி ஒரு கலியாணம் செஞ்சு குடுத்து அன்பாக ஆதரவாகப் பராமரிச்சாலும் சரியாகிடு மாம் எண்டும் சொல்லிச்சினம். எங்களுக்கு இவற்ற சொந்த இடம் உறவுகள் பற்றித் தெரிஞ்சு கொள்ள முடியாததால இவருக்கொரு கலியா ணம் செஞ்சு வைக்க நினைச்சு "கருணைப் பாலம்" என்கிற ஒரு அமைப்பு மூலமாக ஒரு விதவைப் பெண்ணை ஏற்பாடு செய்தம். அடுத்த கிழமை முல்லைத்தீவுக்கு பெண்பார்க்கப் போக இருந்தம். நல்ல வேளை! இந்த தான்தோன்றி அப்பன், மனைவியை மட்டுமில்ல மகனையும் சேர்த்துத் தந்திட்டார்"

"ஓம். அண்ணா கொஞ்ச நாளா இவன்" அப்பா வேணும் அப்பா வேணும் எண்டு என்னப் படாத பாடு படுத்திப் போட்டான். இந்தத் தான்தோன்றியான் கண்ணைத் திறந்து பார்த்திட்டார். வழக்கமாக வெள்ளிக்கிழமைகளில ஊரிலிருக்கிற கோவிலுக்குப் போற எனக்கு இண்டைக்கு இந்தக் கோவிலுக்கு வரவேணும் எண்டு திடீரெண்டு எண்ணம் வந்தது. இவரைக் காட்டத்தானாக்கும். அதுசரி...! அந்தப் பெண் வீட்டார்கள் அடுத்த கிழமை பெண்பார்க்க வரு வாங்களெண்டு எதிர்பார்த்துக் கொண்டிருப் பாங்களே? அவங்களுக்கு என்ன சொல்லுவீங்க?


"தங்கச்சி! அதைப் பற்றிக் கவலைப்பட வேணாம். சொன்னபடி அடுத்த கிழமை பெண் பார்க்கப் போறதுதான். மாப்பிள்ளை பிரகலாத னில்ல நான்தான். இவனுக்கு ஒரு கலியாணம் செஞ்சு வச்சாப் பிறகு கருணைப்பாலம் அமைப்பு மூலமாக நானும் ஒரு விதவைப் பெண்ணை கலியாணம் செய்ய நினைச்சிருந்தன். இப்ப இவன்ர றூட் கிளியராய்ப் போச்செல்லே? அடுத்தது நான் தானே?

"ஓம் அண்ணா. அது நல்ல காரியம் தான். காலியாணத்துக்கு எங்களையும் கூப்பிடு வீங்கதானே?"

"ஓமோம்! நீங்களெல்லாம் இல்லாமலா? அதிருக்கட்டும் தங்கச்சி! பூசை முடிய எல்லாரும் எங்கடை வீட்டுக்குப் போவம். அம்மா தங்கச்சி யவை உன்னைக் கண்டால் மிச்சம் சந்தோஷப் படுவினம். பிரகலாதனில அவையளுக்கு நல்ல பிடிப்பு. ரெண்டு மூன்று நாள் எங்களோடு தங்கி நிண்டு பிறகு நெடுங்கேணிக்குப் போகலாம். நானும் அம்மா தங்கச்சியவையளும் உங்க ளோடு நெடுங்கேணிக்கு வந்து உங்களை விட்டிற்று வருவம் சரியா?

"சரியண்ணா" என ஒப்புக்கொண்ட ராஜி தன் கணவனை அன்போடும் அக்கறையோடும் பராமரித்துத் தன் மகனுக்கு ஒரு அப்பாவைத் தந்த அந்தக் குடும்பத்தின் ஆசியோடு தன் புதுவாழ்வை ஆரம்பிக்க முடிவு செய்து அவர்களுடன் புறப்பட்டாள்!

## காந்தி ஐயா



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பொன்னம்பலம் கந்தையா அவர்கள் அமரராகி விட்டார். 19.12.1918 இல் பிறந்த இவர் காந்தி வழி நின்று கொள்கைப் பற்றுறுதியுடன் ஆசிரியராக, சமூகசேவையாளராக, அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்துள்ளார். எல்லோராலும் காந்தி ஐயா என்று அழைக்கப்பட்ட பெருந்தகை 03.02.2017 அன்று இவ்வுலக வாழ்வைவிட்டு மறைந்தார். 98 வயது வரை வாழ்ந்த பெருமைக்குரிய வருக்கு 'தாயக ஒலி தனது அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது.

*வெள்ளை நிலாவிங்கு வானத்தை மூடி*
*விரிந்து பொழிவது கண்டாய்-ஒளிக்*
*கொள்ளை யிலேயுனைக் கூடி முயங்கிக்*
*குறிப்பினி லேயொன்று பட்டு-நின்றன்*
*பிள்ளைக் கிளிமென் குதலையி லேமனம்*
*பின்ன மறச் செல்லவிட்டு - அடி*
*தெள்ளிய ஞானப் பெருஞ்செல்வ மே!நினைச்*
*சேர விரும்பினன்,கண்டாய்!*

## சரஸ்வதி அம்மா



யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டு, வாழ்வாங்கு வாழ்ந்த திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள் 14.12.2016 இல் தவப்பேறு பெற்றார். அம்மையார் ஆசிரியராக, உப அதிபராகக் கல்விப்பணியாற்றி நல்மாணாக்கர் பரம்பரையை உருவாக்கிப் பெருமைகள் பல பெற்றவர். எல்லோரையும் அரவணைத்து ஆதரவு நல்கிய அன்னையாகப் பவனிவந்து பிறந்த மண்ணின் பெருமையை உலகறியச் செய்தவர். 90 வருடங்கள் நிறைவாக வாழ்ந்து எமது சமுதாயத்திற்கு மேலான பங்களிப்பை வழங்கிய பெருமாட்டிக்கு 'தாயக ஒலி 'தனது அஞ்சலியைச் செலுத்துகிறது.

*பக்தி யுடையார் காரியத்திற்*
*பதறார்! மிகுந்த பொறுமையுடன்*
*வித்து முளைக்குந் தன்மைபோல்*
*மெல்லச் செய்து பயனடைவார்*
*சக்தி தொழிலே அனைத்துமெனிற்*
*சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?*
*விந்தைக் கிறைவா! கண்ணநாதா!*
*மேன்மைத் தொழிலிற் பணியெனையே!*



வன்னி மண்ணின் மைந்தனாக இவ்வுலகில் அவதரித்த ஆற்றல்மிகோன் ஈழத்து எழுத்துலகின் ஆளுமைகளில் ஒருவராகத் தடம் பதித்து பல ஆக்கங்களை வெளிக்கொணர்ந்தார். இலங்கை அரசின் அதியுயர் விருதான 'சாகித்திய ரத்னா' விருதைப் பெற்ற இவர் வரலாற்றுப் பெருவீரன் பண்டாரவன்னியனின் இருப்பை நூலாகத் தமிழுலகுக்குத் தந்து புகழ்பெற்றவர். அத்தகைய வரலாற்ற ஆய்வாளரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அத்தகைய பெருமகனாருக்கு 'தாயக ஒலி' தனது அஞ்சலியை முன்வைத்து நிற்கிறது.

*மேன்மை படுவாய்! மனமே! கேள்*
*விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,*
*பான்மை தவறி நடுங்காதே,*
*பயத்தால் ஏதும் பயனில்லை,*
*யான்முன் உரைத்தேன் கோடிமுறை*
*இன்னுங் கோடி முறைசொல்வேன்,*
*ஆன்மா வான கணபதியின்*
*அருளுண்டு அச்சம் இல்லையே.*

* * *

அறிந்த செய்தி :

## உலகில் 90 சதவீத மக்கள் மாசடைந்த காற்றைச் சுவாசிக்கின்றனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது

இதுதொடர்பான அறிக்கையை வெளியிட்டு உலக சுகாதார நிறுவன பொதுசுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் துறை தலைவர் மரியா நெய்ரா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காற்று மாசுபாடு மிகுந்த கவலைக்குரிய ஒன்று. வளர்ந்த நாடுகளை விட ஏழை நாடுகளில் காற்று மிகவும் அசுத்தமடைந்துள்ளது. ஆனால், காற்று மாசுபாடு அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. காற்று மாசுபாடு நகரங்களில் அதிகம். கிராமங்களில் அதை விட மோசம். சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். தவிர, கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதுடன், சமையலுக்கு பயன்படுத் தப்படும் எரிபொருளையும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக மாற்ற வேண்டும்.

உலகம் முழுவதும் 3,000 நகரங்களில் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப் பட்டன. இதில், 92 சதவீத மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள காற்றின் தரம் உலக சுகாதார மையம் நிர்ணயித்த வரம்பை விட மோசமாக உள்ளது.

காற்றுமாசுபாடு காரணமாக ஏற்படும் இறப்பு களில் 90 சதவீதம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளில் நிகழ்கின்றன.

தெற்காசியா, சீனா, மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட மேற்கு பசிபிக் பிராந்தியங்களில் காற்றுமாசுபாடு மிக மோசமாக உள்ளது. என்று அவர் கூறிய செய்தி மக்கள் நலம் கருதி இங்கே பிரசுரமாகிறது.

பா.ஆனந்தகுமார்

# புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள்

இலங்கையில் ஏற்பட்ட ஒரு கடுமையான அரசியல் நெருக்கடி காரணமாக இனவெறி வாதம் தலைதூக்கியதால் ஈழத் தமிழர்கள் உலகில் உள்ள பல பாகங்களில் புலம்பெயர்ந்து சென்றார்கள். ஏறத்தாழ ஐரோப்பாவின் பெரும் பகுதிகளுக்கு இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளுக் குப் புலம் பெயர்ந்தனர். குறிப்பாக அவுஸ்திரேலியா, நோர்வே, பிரான்ஸ், கனடா, ஜெர்மனி, (இலண்டன்) இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இவர் களுடைய படைப்புகள்தான் இன்றைக்கு உலகை ளாவிய நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளாகப் பெரிதும் அடையாளப்படுத்தப்படு கின்றன. 1970,80களில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் எழுதக்கூடிய சிறுகதைகள் எத்தன்மையின, அவை எப்பொருள் பற்றியன, எவ்வாறான எடுத்துரைப்பினைக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டு வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைக்குப் புலம்பெயர்ந்து எழுதக் கூடிய ஈழத்து எழுத்தாளர்கள் எனப் பட்டியல் போட்டால், இங்கிலாந்திலிருந்து இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் என்ற எழுத்தாளர் மிக முக்கியமான கதைகளை எழுதி வருகிறார். விமல்குழந்தைவேல் சிறந்த சிறுகதைகளை நாவல்களை எழுதிவருகிறார். பிரான்ஸ் நாட்டைப் பொறுத்தவரையில் ஷோபாசக்தி, கலாமோகன், சக்கரவர்த்தி இவர்களெல்லாம் ஒரு புதியபாணியில் கதைகள் எழுதுகிறார்கள். அவுஸ்திரேலியாவில் மாத்தளை சோமு மிக முக்கியமான எழுத்தாளர். அதுபோக இன்றைக் குத் தமிழகத்தில் உள்ள வ.ஐ.ச.ஜெயபாலன் நோர்வேயில் இருந்தபோது சில கதைகளை எழுதியிருக்கிறார். நோர்வேயில் இருந்து தமயந்தி என்பவரும் சில கதைகள் எழுதியுள்ளார். வானம்பாடி டென்மார்க்கில் இருந்து எழுதி வருகிறார். கனடாவிலிருந்து எழுதிவரும் சிறுகதையாசிரியர்களுள் அ.முத்துலிங்கம் மிக முக்கியமானவர். புலம்பெயர்ந்தோர் சிறுகதை கள் என்று நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்கின்ற போது, இவர்களெல்லாம் தவிர்க்க முடியாத படைப்பாளிகளாக இருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்பது வலியின் இலக்கியமாக இருக்கிறது. எவ்வாறு விளிம்புநிலை மக்களான தலித் மக்களின் எழுத்துகளும் பெண் எழுத்தும் வலியின் மொழியில் அமைந்து இருக்கிறதோ, அதுபோல புலம்பெயர்ந்தோர் இலக்கியமும் வலியின் மொழியில் எழுதப்பட்டதாக அமைந்துள்ளது. இந்த எழுத்தாளர்கள் கடுமையான நெருக்கடிக ளுக்கு ஆட்பட்டு வெவ்வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள். எனவே, வரலாற்றுத் தொடர்பு டைய பூர்விகமான சொந்த நிலத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு வேறொரு இடத்திற்குச் சென்று தங்களுடைய புலம்பெயர்வு வாழ்க்கை அனுப வங்களை இந்தக் கதைகளில் பதிவு செய்கின்றனர்.

புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் பெரும் பாலும் யதார்த்தம் என்று சொல்லக்கூடிய நடப்பியல் போக்கில் கருத்து மெய்ம்மையியல் (Realism) என்று எழுதப்பட்டு உள்ளன. ஆனால் பாரிஸில் இருந்து எழுதக்கூடிய எழுத்தாளர்கள் பின்நவீனத்துவப் பாணியில் எழுதுகின்றனர். குறிப்பாக கலாமோகன், சக்கரவர்த்தி போன்றோர் பின் நவீனத்துவம் போன்ற புதியமுறை களில் எழுதக்கூடிய படைப்பாளிகளாக இருக்கின் றனர். ஆனால் பெரும்பான்மையான சிறுகதை எழுத்து என்பது யதார்த்த மொழியில் வலியின் மொழியில் நேரிடையாக மக்களுக்குத் தம் வாழ்

வியலைச் சொல்லக்கூடியவையாக அமைந்துள் ளன. புலம்பெயர்ந்தோர் கதைகள் முன் வைக்கக்கூடிய பொதுவான பிரச்சினைகளுள் ஒன்று, தாயக ஏக்கம் ஆகும். அவர்கள்தம் அன்னைபூமியைப் பிரிந்து வந்து வேறொரு நிலத்தில் இருக்கிறார்கள். இன்னும் வேர் விடாமல் ஒரு புதிய மண்ணில் பதியம் போடப் பட்டு இருக்கிறார்கள். அதனால் தம்முடைய சொந்த நாட்டைப் பற்றிய நினைவுகளைப் பல கதைகளில் சொல்கிறார்கள். இரண்டாவதாக

இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்கள் பெரும்பாலும் கூலிகளாக இருக்கிறார்கள். மெத்தப்படித்தவர்களாக இருந்தாலும் கூலி உழைப்பில் ஈடுபட வேண்டிய பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. அவர்களுடைய வார்த் தையில் சொல்வதானால் நிலம் கழுவும் (தரை யைச் சுத்தம் செய்தல்) வேலை, பாத்திரம் கழுவும் வேலை, பேப்பர் கொடுக்கும் வேலை - இந்த வேலைகளில்

தான் பெரும்பாலான புலம்பெயர்ந்த தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பட்டதாரி யாக இருந்தபோதும் தெருவில் இருந்து விளம் பரத் துண்டறிக்கைகள் கொடுப்பது, அடுக்குமாடி வீடுகளில் செய்தித்தாள் துண்டறிக்கை போடுவது போன்ற வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இதில் ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லை. எனவே, அவர்கள் செக்கு மாடுகள் போல் உழைக்கிறார் கள். அவர்களின் உழைப்பு ஐரோப்பிய முதலாளி களால் சுரண்டப்படுகிறது. புலம்பெயர்ந்தோர் சிறுகதைகளின் மூன்றாவது மிக முக்கியமான பாடு பொருள் நாடற்ற, வீடற்ற, வீதியற்ற அலை வுத்தன்மை. இவர்கள் நாடற்றவர்களாக - வீடற் றவர்களாக - தெருக்களில் அலைந்து திரியக் கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர் களுக்கான சமூக வெளி என்பது ஒரு நிரந்தர மான வெளியாக இல்லை. நாடுகளும் வீடு களும் தெருக்களும் இன்றி அலைந்து திரியக் கூடிய ஒரு 'மிதவைவெளியில் (Fluid Space) வாழ்கிறார்கள். மிதவை வெளியில் அலைந்து திரியக்கூடிய இந்தப் பிரச்சினை பல கதைகளில் பேசப்படுகிறது.

புலம்பெயர்ந்த தமிழர்களது தேசியம் என்பதும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இப்போது 'நாடுகடந்த தேசியம்' என்ற கருத்து உருவாக்கப்படுகிறது. எனக்கான மொழி எது? எனக்கான தேசியம் எது? என்ற பிரச்சினை வருகிறது. இது புலம்பெயர்ந்த தமிழருடைய அடையாளம் சார்ந்த பிரச்சினைகளாக இருக் கின்றன. இதையெட்டி எமது குழந்தைகள் எம் தாய்மொழியில் படிப்பதா அல்லது ஐரோப்பிய மொழியில் படிப்பதா என்கிற வகையான சிக்கல் கள் இவர்களுடைய கதைகளில் இடம்பெற்றிருப் பதைப் பார்க்கிறோம். இவை தவிர, சில கதைகளில் பாலியல் சார்ந்த பிரச்சினைகளும் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் தனியாகப் போய் இருக்கும்போது ஒரு பக்கம் பாலியல் உணர்வே இல்லாமல் குடும்ப கஷ்டங்களில் மிகவும் சவலையாகிப் போய்விடுகிறார்கள். சில கதைகளில் இவ்வாறு போகக் கூடிய ஆண்க ளின் பாலியல் பிரச்சினை, தனிமனித உளவியல் நெருக்கடி பதிவு செய்யப்பட்டுள்ளன. கடைசியாக நிறவெறி பிரச்சினை. நாம் நம்முடைய

நிறம் வெள்ளையாக இருந்தாலும் அங்கு கறுப்புதான். பாகிஸ்தானியரைப் போல, அல்ஜீரி யரைப் போல, துருக்கியரைப்போல, ஆப்பிரிக் கரைப்போல இங்கிருந்து போகக்கூடிய தமிழர் களும் கறுப்பர்களாகக் கருதப்பட்டு தமது ஐரோப்பிய எஜமானர்களால் எப்படி நிராகரிக்கப் படுகிறார் கள் என்பது பல கதைகளில் பதிவாகியுள்ளது. எனவே, புலம்பெயர்ந்தோர் கதைகளில் இப்படி ஐந்து பிரச்சினைகள் மிக முக்கிய பிரச்சினை களாகப் பேசப்பட்டுள்ளன. மேற்சொன்னது போல தாயக ஏக்கம், நிறவெறி, மிதவைவெளி, தேசம், மொழி சார்ந்த அடையாளச் சிக்கல்கள் இவை யெல்லாம் இந்தக் கதைகளில் பேசுபொருளாக இருக்கின்றன.

இனி புலம்பெயர்ந்தோர் சிறுகதைகளின் பொதுவான தன்மைகளைப் புரிந்துகொள்ளுவ

தற்காக சில கதைகளை மட்டும் எடுத்துக்காட்டுக் களாகக் காணலாம். முதலில் மாத்தளை சோமு வின் 'முகம்' என்ற கதையைப் பார்ப்போம். ஒரே முகம் இரண்டு நாடுகளில் இரண்டு விதமான மதிப்பீட்டைப் பெறுகிறது. இக்கதையின் நாயகர் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு நெருக்கடி காரணமாக ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து செல்கிறார். யாழ்ப்பாணத்தில் அவர் முகத்துக்கு மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. இவர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர் என்றாலும், அழகான சுருட்டை முடி, வட்டமான முகம். அவர் முகத்தின் அழகைப் பார்த்து முடியைப் பார்த்து பல இலட்ச ரூபாய்கள் வரதட்சணையாகக் கொடுக்கிறார்கள். பெண்ணும் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட அழகான முகம் ஆஸ்திரேலியாவுக் குப் போகும்போது அங்கு யாருக்கும் பிடிக்க வில்லை. ஏனென்றால் அது கறுப்பு முகமாக இருக்கிறது. ஆக, தன்னுடைய ஊரில் அழகாகச் சொல்லப்பட்ட அந்த முகம் ஐரோப்பிய நாட்டில் நிராகரிப்பதைக் கண்டு அக்கதையின் நாயகன் மனம் நொந்து போகிறான். மாத்தளை சோமு இன்னொரு கதையிலும் இந்நிறவெறியின் கொடூரத்தைப் பற்றிச் சொல்லியுள்ளார். ஒரு தமிழ்ப்பெண் வேலைக்குச் செல்வதற்காக அதி காலையில் ஐந்தரை மணிக்குக் குளித்துத் தயாராகி தெருவில் வாகனத்திற்காகக் காத்திருக் கிறாள். அப்போது அதே வழியில் இன்னொரு வண்டியில் வந்த வெள்ளைக்காரப் பெண் அவ ளுடைய முகத்தில்காறி உமிழ்கிறாள். ஏனென்றால் அது கறுப்பு முகம். மாத்தளை சோமுவின் 'சொந்த சகோதரர்கள்' என்ற கதை ஒரு ஈழத் தமிழன் வேறொரு நாட்டிற்குப் புலம் பெயர்ந்து போனபோது அவனைக் குடிஅமர்த்த ஏற்பாடு செய்கின்ற அவனது நாட்டைச் சேர்ந்த தமிழன், அவனிடமே பணத்தை ஏமாற்றுவதைப் படம் பிடித்துள்ளது.

அடுத்து குறிப்பிடப்பட வேண்டியது இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'றோஸா லஷ்சம்பெர்க் வீதி' எனும் கதை. இது ஜெர்மன் நாட்டில் பெர்லின் நகரத்தில் றோஸா லஷ்சம்பெர்க் தெருவில் நடக்க் கூடிய கதை.றோஸா லஷ்சம்பெர்க் மிக முக்கியமான ஒரு புரட்சிப் பெண்மணி. அவர் போலந்தில் பிறந்து பல நாடுகளுக்குச் சென்று, ஜெர்மனியில் வந்து மிகப் பெரிய புரட் சியை நடத்திய மார்க்சியப் பெண்ணியவாதி. அவரது நினைவாக இருக்கக்கூடிய வீதியில் ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு நடைபெறும் துயரம் தான் இந்தக் கதை. இலங்கையில் சொந்த நாட்டில் மிகச் சுகமாக வாழ்ந்த பெண், கணவனுக்காகத் திருமணம் முடித்த இடத்திலேயே ஜெர்மன் வந்தபோது, நள்ளிரவில் ஒரு மணிக்கு எழுந்து பாலூட்டும் கைக்குழந்தையை வீட்டிலேயே போட்டுவிட்டு, பேப்பர் போடுவதற்காக சைக்கி ளில் ஒன்றரை மணிக்கு றோஸா லஷ்சம்பெர்க் தெருவில் 'கொள்ளிவாய் பேய்' போல் செல்கிறாள். பல நாட்டினர்கள் திரியும் அந்தத் தெரு மிகவும் அச்சம் தருவதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆணாதிக்க சமூகத்தில் பாலியல் வன்முறை சார்ந்த அச்சம் ஒருபக்கம். சைக்கிளை வழிமறிக் கும் காமவெறியர்களிடமிருந்து தப்பினாலும் நிறவெறி சார்ந்த அச்சம் மறுபக்கம் இருக்கிறது. ஏனென்றால் முதல் நாள் ஒரு துருக்கிப்பெண் அங்கு எரிக்கப்பட்டுள்ளார். கறுப்பர்கள் வெளி யில் வர முடியாது. இப்பிரச்சினையைப் பற்றி தம்பா ஒரு அழகான கவிதை எழுதியுள்ளார்.

நிருபமா கவிதையில் மகள் அம்மாவைப் பார்த்து கேட்கக்கூடிய கேள்வி 'றோஸா லஷ்சம் பெர்க் வீதி' கதையில் இருப்பதைப் பார்க்கிறோம். சொந்த நாட்டிலிருந்து உயிருக்குத் தப்பிய இவர்களின் உயிர்ப் போராட்டம் புலம்பெயர்ந்த நாட்டிலும் தொடர்கிறது. இக்கதையின் தலைவி சுமதி 'சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்தது மாதிரி' தன் நிலையை உணர்கிறாள்.

வ.ஐ.ச. ஜெயபாலன் 'செக்கு மாடு' என்ற கதையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளில் பேப்பர் போடக்கூடியவர்களாக, கூலித்தொழிலாளிகளாக அலைந்து திரிகிறார் கள் என்பதைப் பதிவு செய்துள்ளார். அதே போல வானம்பாடி எனும் எழுத்தாளர் ஜெயபாலன் வாழ்ந்த நோர்வே நாட்டு 'ஒஸ்லோ' நகரத்தில்

இருந்து எழுதிய 'வேப்பம்பூ' என்ற கதையும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கதையில் தாயின் தாலியை விற்று தங்கைகளின் திருமணத்திற்காக நோர்வே வந்த ஒருவன் சொந்த நாட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவளுடைய தங்கை அங்கிருந்து வேப்பம்பூ கலந்த வெங்காய வடகத்தை அனுப்பி வைப்பதாக கதையில் சொல்லப்படுகிறது. இதே போல வான் நிலாவின் 'அன்னைபூமி என்ற கதையில் புலம்பெயர்ந்த குழந்தைகள் யாழ்ப்பாணம் போய் வீட்டுக் கிணற்றில் கல்போட்டு விளையாடுவதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தேசங்களில் முறையான நுழைவுரிமை, கடவுச்சீட்டின்றி, ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களும் பல சிறுகதைகளில் பதிவாகியுள்ளன. மறைந்து வாழ்தல், தப்பிச் செல்லுதல் ஆகிய நிலைகளில் அவர்கள் படும் துயரங்கள் வேதனைகள் அளவிடற்கரியன. ஜெர்மனியிலிருந்து கனடாவிற்கு அமெரிக்கக் கறுப்பன் ஒருவனின் கடவுச்சீட்டில் தப்ப முயன்று நடுவானில் விமானம் வெடித்துச் சிதறி இறக்கும் தமிழன் ஒருவனின் அவலநிலையை பார்த்திபன் 'தெரியவராதது' என்ற கதையில் குறிப்பிட்டுள்ளார்.

கலாமோகன் பாரிஸ் நகரத்திலிருந்து எழுதக்கூடிய எழுத்தாளர்களில் முக்கியமானவர். தொடர்ந்து எழுதக்கூடியவர். அவருடைய 'மூன்று நகரங்களின் கதை' மிக முக்கியமான கதை. புலம்பெயர்ந்த வாழ்க்கையினுடைய அலைவு நிலையை - மிதவை நிலையின் - அவலத்தை அனுபவத்தைச் சொல்லுவதுதான் மூன்று நகரத்தின் கதை. இந்தக் கதையின் நாயகன் பாரிஸ் நகரில் இருக்கிறான். அவனுக்கு ஒரு தந்தி வருகிறது. அவன் அப்பா இறந்து விட்டார். அது உண்மையா என்று தெரிந்து கொள்ள அவனுடைய கிரடிட் கார்டை எடுத்துக் கொண்டு ஒரு ஃபோன் பூத்துக்குச் செல்கிறான். அவனுடைய மாமாவுக்குப் பேசுகிறான். அவனுடைய மாமா வெளியில் போயிருக்கிறார். ஒரு மணிநேரம் கழித்து வருவார். அவன் ஒரு பீர் சாப்பிட்டு வந்து திரும்பவும் ஃபோன் பேசுறான். அவனுடைய மாமா பேசுகிறார். 'நல்லாதான் இருந்தார். திடீரென்று விழுந்தார், இறந்தார். நீ உடனே காசு அனுப்பிவை.' காசு காசு என்றவுடன் அவனுக்கு நினைவு வருகிறது.

நான் எப்படி இந்த ஊருக்கு வந்தேன். இந்த உடல் காசால் ஆனது. என்னுடைய முதல் நகரம் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் நான் பட்டதாரி ஆனேன். வேலை கிடைத்து கொழும்புக்குப் போனேன். கொழும்பு என்னுடைய இரண்டாவது நகரம். அந்த இரண்டாவது நகரத்தில் வேலை கிடைத்து வாழ்ந்த போது நான் கொடுமையாக வேட்டையாடப்பட்டு மீண்டும் முதல் நகரத்திற்குத் துரத்தப்பட்டேன். முதல் நகரத்திற்கு அகதியாக வந்தபோது, என்னுடைய வீட்டில் எனக்கான ஈமச்சடங்குகள் நடத்தப்பட்டு இருந்தன. அங்கு இனக்கலவரத்தில் இறந்து விட்டேனென எல்லாச் சடங்குகளும் செய்யப்பட்டிருந்தன. செத்த வீட்டில் நான் சென்று பார்க்கும் போது என் நிலைமை எப்படி இருக்கும். வேறு வழியில்லாமல் மீண்டும் நான் உயிர் பிழைத்து விட்டேன் என்று சொல்லி எல்லாக் கோயில்களிலும் பூசை செய்தனர். என்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று அங்கும் இங்கும் கடன் வாங்கி, என்னைப் பாரிசுக்கு அனுப்பி வைத்தனர். எனவே இந்த உடல் வெறும் உடல் அல்ல காசாலான உடல். நான் பாரிஸ் நகரத்திற்கு வந்து சேர்ந்தாலும் நான் மூன்று நகரங்களில் வாழ்ந்து இருக்கிறேன். ஆனால், எனக்கு எந்த நகரமும் சொந்தமில்லை. என்னுடைய நான்காவது நகரம் எது என்பது கேள்விக்குறியாக இருக்கிறதென இக்கதை முடிகிறது.

கலா மோகன் 'நிஷ்டை' தொகுப்பிலுள்ள இன்னொரு மிக முக்கியமான கதை 'தெரு' என்பதாகும். தெருக்களைப் பற்றி விவரணையாக கதை தொடங்குகிறது. கதையின் நாயகன் சிறுவயதில் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது தெருக்களில் நாய்களைப் பிடிக்கிறார்கள். நாய்களைப் பிடிப்பதைப் பற்றிய நினைவு வரும்போது, அதைப்போல் நானும் ஒரு

தெருநாய்போல்தான் இருக்கிறேன் என தெருவில் அலையும் நாயகன் உணர்கிறான். பகலில் ஒரு ரெஸ்டாரண்டில் வேலை பார்த்து விட்டு, வீடு இல்லாததால் இரவில் தெருத் தெருவாக சுற்றிப் பொழுதைக் கழிக்கிறான், கதைத்தலைவன். பகலில் சுமூகமாக இருக்கும் அந்தத்தெரு இரவில் அச்சம் தருவதாக இருக்கிறது. அந்தத் தெருவில் இரவில் நடந்து போகும்போது வேசிகள் நின்றுகொண்டிருக்கி றார்கள், வெவ்வேறு நாட்டு வேசிகள். அவர்க ளில் பலர் ஏற்கனவே பார்த்தவர்கள். இப்போது மாறியிருக்கிறார்கள். பிச்சைக்காரர்கள் இருக்கி றார்கள். அப்படியே நடந்து போய்க் கொண்டிருக் கிறான். தூங்காமல் நடந்து நடந்து, எங்கேயும் படுக்காமல் பொழுது விடிந்து காலையில் வரும் போது, அங்கு பிரெஞ்சு விடுதலை இயக்கத்தைச் சார்ந்த பெண்மணிகள் 'தெரு' என்ற பத்திரிகையைக் கையில் வைத்து விற்கிறார்கள். அதனை அவன் வாங்கிக் கொண்டு, தான் வேலைபார்க்கும் உணவகத்திற்குச் செல்கி றான். ஆக நாடுகளும் வீடுகளும் சொந்தமில்லா மல் ஒரு மிதவை வெளியில் இருக்கக் கூடிய மனிதனின் வாழ்க்கையைத் தான் கலாமோகன் இக்கதையில் சொல்லியிருக்கின்றார். அவரது 'இரா' என்ற கதை, 'குளிர்' என்ற கதை இவை யெல்லாம் பாலியல் சார்ந்த பிரச்சினைகளைப் பேசுகின்றன. தனிமனிதனின் உளவியல் பிரச்சினை எப்படிப் பாலியல் சார்ந்து அவனை அலைக்கழிக்கின்றன. அதே போல 'நிஷ்டை' என்ற கதை, படைப்புமனம் சார்ந்த பிரச்சினை யைப் பேசுகிறது. இதில் ஒரு முக்கியமான ஒரு விவாதம் முன்வைக்கப்படுகிறது. இயக்கத்தைக் கட்டுவது என்பது தனிமனித உளவியல் சிக்கல் களை, பாலியல் சிக்கல்களை மறைத்துவிட்டு சாத்தியமா என்ற ஒரு கேள்வியை முன் வைக்கிறது. எதை எழுதுவது? தனிமனிதனின் போராட்டத்தைக் காட்டுவதுதான் படைப்பா? ஒரு தனிமனிதனுடைய உளவியல் பிரச்சினை களை, அவனுடைய பாலியல் பிரச்சினைகளைச் சொல்லுவது படைப்பு இல்லையா என்று கதையை முடிப்பார். விவாதம் போன்று 'நிஷ்டை' என்ற கதை நீண்டு செல்கிறது.

புலம்பெயர்ந்தோர் சிறுகதை என்பது இன்றைக்குத் தமிழில் புதிய வரவாகவும் வேறு எந்த மொழிக்கும் - எந்த ஒரு இனத்திற்கும் இல்லாத - ஒரு சிறப்பாக அமைந்துள்ளது. அதே நேரத்தில் உலகின் பல பகுதிகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் சொல்லவொண்ணா இன்னல்களைச் சந்தித்திருக்கிறார்கள் என்பதை இக்கதைகள் வலியின் மொழியில் பதிவு செய்துள்ளன.

## இரா.உதயணனுக்கு திருப்பூர் தமிழ்சங்க விருது



ஆண்டுதோறும் தமிழில் வெளிவரும் சிறந்த படைப் புக்களுக்கு தொடர்ந்து 25 ஆண்டுகளாக பரிசுகளை வழங்கி வரும் தமிழ் நாட் டில் பிரபலமான பல பணிக ளைச் செய்து வரும் திருப்பூர் தமிழ்ச் சங்கம் தனது 25ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் அதேவேளை, 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறந்த நூல்களைத் தெரிவு செய்து இலக்கியத்திற் கான விருதுகளை அறிவித்துள்ளது.

அந்த வகையில் வவுனியூர் இரா.உதயண னின் 'வலியின் சுமைகள்' நாவல் சிறந்த நாவலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நாவல் தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலை யாளம், இந்தி ஆகிய ஐந்து மொழிகளில் ஒரே மேடை யில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர் தமிழ்சங்கத்தின் இலக்கிய விருது கள் வழங்கும் விழா அண்மையில் புத்தகக் கண்காட்சி அரங்கம் பத்மினி கார்டன் திருப்பூ ரில் நடைபெற்றது. வவுனியூர் இரா.உதயண னுக்கு தாயக ஒலியின் நல்வாழ்த்துக்கள்.

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors

- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com



23 வருட கால அனுபவம்

# Linga & Co

**Legal Advisors & Immigration Specialists**

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

- Family Law
- Employment Law
- Criminal Law



**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017

# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY


59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA



## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP




*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs–male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA



தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது



**OUR BRANCHES:**

**EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON**

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

**TEL : 020 8518 3288**

**MOB : 07950 346 432**

**Email : info@henshou.com Web : www.henshou.com**

# குழந்தைகளின் படைப்பாற்றல் அழியும் அபாயம்

ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் தொலைக்காட்சியை பார்க்கும் குழந்தைகளுடன், புத்தகங்களை படிக்கும் அல்லது ஜிக்சா புதிர்களை தீர்க்கும் குழந்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொலைக்காட்சியை பார்க்கும் குழந்தைகளின் ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் குறைவாக இருக்கிறது என்று ஒரு புதிய ஆய்வு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொலைக்காட்சியை குறைந்த அளவில் பார்க்கும் இளம் குழந்தைகளின் ஆக்கபூர்வமான சிந்தனைகள் அதிகரிப்பதில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் உள்ள இங்கிலாந்து பல்கலைக்கழகம், மூன்று வயதுடைய 60 குழந்தைகளிடையே நடத்தப்பட்ட ஆராய்ச்சியில், 15 நிமிடங்களுக்கு மேல் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளின் ஆக்கப்பூர்வமான சிந்தனை படைப்புகள் தற்காலிகமாக குறைந்து வருவது கண்டறியப்பட்டது.

ஏனெனில் தொலைக்காட்சியை பார்ப்பதால் குழந்தைகளின் ஆக்கபூர்வமான சிந்தனைகளில் உடனடியாக பாதிப்பு ஏற்படுவதை நாங்கள் ஆராய்ச்சியில் முழுமையாக கண்டறிந்துள்ளோம் என்று உளவியல் விரிவிரையாளருமான டாக்டர் சாரா ரோஸ் தெரிவித்துள்ளார்

குறைந்த அளவு தொலைக்காட்சியை பார்த்து, படிப்பிலும், புதிர் விளையாட்டுகள் விளையாடும் குழந்தைகளின் ஆக்கபூர்வமான சிந்தனை படைப்பாற்றல்கள் மற்றும் கருத்துக்கள் அதிகளவில் காணப்படுகிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். குறைந்த அளவு தொலைக்காட்சியை பார்க்கும் குழந்தைகளுக்கும் படைப்பாற்றல் திறன் பெருகிக்கொண்டே இருக்கும், அதனால் அவர்களின் கருத்துகள் மிக தெளிவாகவும் துள்ளியமாகவும் இருக்கும்.



அதிகளவு தொலைக்காட்சியை பார்க்கும் குழந்தைகளின் படைப்பாற்றல் குறைவதால் அவர்களின் அறிவு சார்ந்த வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படும் அபாயம் உள்ளதாக ஆரா்ய்ச்சியில் தெரியவந்துள்ளது. பெற்றோர்களே உங்கள் குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளுங்கள்.

# அதிகாரம்!

பிள்ளைகளின் இளமைக்காலம்
எதற்கும் அன்று
பெற்றவரின் அனுமதிக்காய்
காத்திருந்தது.
பெற்றவரின் முதுமைக்காலம்
எதற்கும் இன்று
பிள்ளைகிளன் அனுமதிக்காய்
கையேந்தி நிற்கிறது!

# சந்தேகம்!

தாய்நாட்டை
நேசிக்கச் சொல்கிறார்கள்
நாங்கள் நேசிக்க வந்தால்
அவர்கள் யோசிக்கிறார்கள்
அந்தத் தாயை நாம்
தனியுடைமை ஆக்கிவிடுவோமென்று!

# நாய் வால்!

திருத்தங்கள் எத்தனை வந்தாலும்
திருந்தாத ஜன்மங்கள்
திருந்தும் வரை
வருத்தங்களும் கண்ணீருமே
எங்கள் வாசல்களில்

-ஷெல்லிதாசன்

# வாசனை

விடியல் பொழுது வரும் வாசனை
புதுப் பூக்களில் பரவும் வாசனை
மெல்லக்காற்று சேர்த்து வரும் வாசனை
எவ்வளவு இனிமை இந்த வாசனை

மனதுள்ளே உருவாகும் வாசனை
புதுச்சிந்தனைகளில் எழும் வாசனை
அது கைக்கெட்டிவரும் வாசனை
நம் சகோதரத்துவத்தின் வாசனை

வடக்கில் இருந்து வரும் வாசனை
தெற்கில் வரும் அந்த வாசனை
பல திசைகளிலும் வரும் வாசனை
ஒற்றுமைப் பூக்களில் மலரும் வாசனை

நம் குழந்தைகளில் வரும் வாசனை
அன்னை ஊட்டிய பால் வாசனை
பற்பல மக்கள் இடை ஒரு வகை வாசனை
அது அன்பும் நட்பும் கலந்த வாசனை

நம் இலக்கியத்தில் வரும் வாசனை
உரை நடைகளில் வரும் வாசனை
கவிதைகளில் பூத்து வரும் வாசனை
தமிழ் மொழியில் நிறைந்ததே வாசனை

ஜீ.விஜேசேகர
நாக்கியாதெனிய
(சகோதரமொழி எழுத்தாளர்)

# அருளாளர்கள் அறுபத்து மூவர்




இது கலியுகம். கலியுத்திலும் கணினியு கம். பொதுவாக, ஆன்மீகத்துறையில் அக்கறை குறைந்து கொண்டு வருகின்றது. எனவே, எமது சமயப் பொருமைகள், உண்மைகள் கூறும் நூல் கள் இத் தருணத்தில் தோன்றி எமை மகிழ்விப்பது - மகிழ்ச்சி - இத்தகைய ஆன்மீக முக்கியத்துவம் செறிந்த நூல் தான், மேலே குறிப்பிட்டப்பட்ட நூல். இதனை கலாபூஷணம் "சைவ சித்தாந்த மணி" திருமதி.இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் மிக அக்கறையுடன், சைவ உலகிற்கு ஆக்கித் தந்துள்ளார்.

பெரியோர்க்கும், குறிப்பாக இளைய சமு தாயத்திற்கும் மிக மிக அவசியமானது இந் நூல் என்பதை எவரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

இந்நூலின் கண் எம்பிரானின் மெய்யடி யார்களான, 63 சைவ நாயன்மார்கள், சந்தான குரவர்கள், தொகையடியார்கள், வரலாறுகள் மற்றும் சமய சம்பந்தமான விடயங்கள் என்பன அழகு தமிழில் எளிய நடையில் விரிவாக விளக்கமாக படிப்போரைத் தொடர்ந்து படிக்கும் ஆவலைத் தூண்டும் வகையில் தரப்பட்டுள்ளமை, இங்கு பாராட்டப்படக் கூடிய விடயமாகும்.

இந்நூலின் நோக்கம், கணினியுகத்தின் இறுதிய பிடியில் அகப்பட்டிருக்கும் எமது இளைய தலைமுறையினர் அத்தோடு நின்ற விடாமல் ஆன்மீக அறிவையும் பெற வேண்டும். எமது சைவ இப்பாரம்பரியங்களின் வழி வாழ வேண்டும் என்பதேயாம். ஆன்மீக அறிவு அற்ற வாழ்வு, 'வாசமில்லா ரோஜா" வின் கதை தான்.

மேலும் மெய்யடியார்களின் வரலாறு களோடு, அவர்கள் பாடியருளிய தேவார திருவாசகங்களில் முக்கியமான சில பாடல் களையும் அம்மையார் இந்நூலின் கண் தந்துள்ளமை மிக்க பயன் தரும் நோக்கமாகும்.

சைவத்தின் தலைமைநூலகக் கருதப் படும் சேக்கிழார் தந்த பெரியபுராணம் தரும் அரிய கதைகளை எமக்கு இந்நூல் அழகுறத் தந்து படிப்போரை சைவநெறி நிறுத்தி அவர் களை சிவத்தின் பாலும் சைவத்தின் பாலும் ஈர்த்து அருள்கின்றது என்றால் மிகையாகாது.

சைவப் பரம்பரையில் வந்த இந் நூலாசிரி யர் நற்பணியைப் பாராட்டுவோம். இந்நூலின் மூலம் சைவ அன்பவர்களுக்கு அரிய தோர் விருந்து படைத்துள்ளார் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள். எனவே அந்த விருந் தினையாம் சுவைத்து நற்பயனடைவ்தோடு அம்மையார் நலம் காண வாழ்த்துவோம்.

- சிவப்பிரியா

# "உளவள ஆலோசனை வினைத்திறன் மிக்கதாக உருவாக வேண்டும்"

பாடசாலை மாணவர்களின் சமகால நடத்தைகளை கவனத்திற்கொண்டு, பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உளவள ஆலோசனை வழங்கும் செயற்பாட்டை வினைத்திறன்மிக்க செயற்பாடாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

தொலைக்காட்சி, சினிமா, இணையப் பாவனை மற்றும் கையடக்கத் தொலைபேசி போன்ற நவீன தொடர்பு சாதனங்களின் தாக்கம் மிக அதிகளவில் மாணவர்களை பாதித்துள்ளது. சினிமாவில் தோன்றுபவர்களை தமது முன்மாதிரிகளாகக் கொண்டு சில மாணவர்கள் செயற்பட முற்படுவதாக கிடைக்கப்பெறும் தகவல்களினூடாக அறிய முடிகிறது.

இவ்வாறான மாணவர்களின் செயற்பாடுகள் ஆரோக்கியமான எதிர்கால சமுதாயமொன்றை உருவாக்குவதில் சிக்கல் நிலைகளைத் தோற்றுவிக்கும். அத்துடன், அண்மைய ஆய்வொன்றின் பிரகாரம், நாடளாவிய ரீதியில் கடந்த ஒன்றரை வருடத்தில் 32 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இவற்றின் பின்னணியில் மனவிரக்தி, மன அழுத்தம், காதல் தோல்வி, பெற்றோரின் கவனிப்பும் பாசமும் அற்ற நிலை, போதை வஸ்துப் பாவனை, சமூக விரோத செயற்பாடுகள் என்பன காரணங்களாக இருந்துள்ளன. மாணவர்களின் இத்தகைய இறப்புக்கள் எதிர்கால சமுதாயத்தின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.

சமகால மாணவர்களின் இவ்வாறான அபாயகரமான நடத்தைப் போக்கை மாற்றியமைப்பதற்கு அவர்களுக்கு பாடசாலைகளில் சிறந்த முறையில் உளவள ஆலோசனை வழங்கப்படுவது அவசியம்.

இடைநிலைப் பாடசாலைகளில் உளவள ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றபோதிலும், அவை அத்துறையில் அனுபவமும் தொழில்வாண்மை அறிவும் உடையவர்களால் வழங்கப்படுவதில்லை.

இவற்றைக் கருத்திற்கொண்டு, உளவள ஆலோசனைத் துறையில் தொழில்வாண்மை அறிவுடையோரை உள்வாங்கி பாடசாலைகளில் உளவள வழிகாட்டல் ஆலோனை வழங்கும் நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்க தாக்க வேண்டும். இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் இக் கருத்தை முன்வைத்துள்ளது.

நன்றி - வீரகேசரி

*தாயகஒலி சந்தாதாரர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள். அன்பானவர்களே! சந்தாப் பணத்தை வங்கியில் செலுத்துபவர்கள் தயவு செய்து வங்கியில் பணம்செலுத்திய பிரதியை எமக்கு அனுப்பிவைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம். பலர் வங்கியில் சந்தாப்பணத்தை வைப்பிலிட்டுள்ளார்கள். அத்தனை நல்லுள்ளங்களுக்கும் விளம்பரங்கள் தந்துதவிய பெருந்தகைகளுக்கும் எமது மேலான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் ஆதரவு எம்மை உற்சாகத்துடன் செயற்பட வைத்துள்ளது.*

*- ஆசிரியர் குழு*

# மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை கண்டறிந்த இந்திய சிறுவன்


பிரிட்டனில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 16 வயது சிறுவன், மிகவும் தீவிரமான, மருந்துகளுக்கு கட்டுப்படாத மார்பக புற்று நோய்க்கு சிகிச்சை முறையைக் கண்டறிந்துள்ளார்.

பொதுவாக மார்பக புற்றுநோய் உருவாவதற்கு ஈஸ்ட்ரோஜென், புரோஜெஸ்டிரோன் உள்ளிட்ட 'ஹா்மோன்கள் காரணமாக உள்ளன. இதைத் தொடக்கத்திலேயே கண்டறிந்துவிட்டால், இந்த புற்று நோய் செல்கள் வளர்வதை டமோக்சி பென் உள்ளிட்ட மருந்துகள் மூலம் கட்டுப்படுத்த முடியும்.

எனினும், 3 (ட்ரிபிள்) எதிர்மறை மார்பக புற்றுநோயை மருந்துகள் மூலம் குணப்படுத்த முடியாது. அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு மற்றும் கீமோதெரபி ஆகியவை அடங்கிய கூட்டு மருத்துவ முறையில்தான் இதற்கு சிகிச்சை அளிக்க முடியும். இந்த முறைகளில் நோயாளி உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பு குறைவு. இந்நிலையில், இந்த வகை புற்றுநோய்க்கான சிகிச்சை முறையை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கிர்தின் நித்தியானந்தம் (16வயது) கண்டுபிடித்துள்ளார்.


இதுகுறித்து அவர் கூறும்போது, "மருந்துக்கு கட்டுப்படாத புற்று நோய்களை மருந்துகளுக்கு கட்டுப் பட வைக்கும் சிகிச்சை முறையைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடு பட்டு வருகிறேன். இதன் பலனாக, இதுவரை மருந்துகளுக்கு கட்டுப்படாமல் இருந்த எதிர்மறை மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளேன். குறிப்பாக, இந்த வகை புற்றுநோய்க்கு காரணமாக உள்ள Li4 புரதத்தை உருவாக்கும் மரபணுக்களை அழிப்பதற்கான வழிமுறையைக் கண்டுபிடித்துள்ளேன்" என்றார்.

மனநிலை பாதிப்பு (அல்ஸீமர்) நோயை முன்கூட்டியே கண்டறியும் 'சோதனை முறையைக் கண்டு பிடித்ததற்காக கடந்த ஆண்டு கூகுள் அறிவியல் கண்காட்சி விருது இவருக்கு வழங்கப்பட்டது.



# டெங்கு ஒழிப்போம்

நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே
பாட்டோடு சொல்லுகின்றேன் பக்குவமாய் கேளுங்களே!



1. எங்கள் வீடு வளவுகளிலே
டெங்கு நுளம்பை அழித்திடுவோமே
எங்கள் உயிரை இனி நாமே
பங்கம் இன்றிக் காத்திடுவோமே

2. சாவு வந்து எம்முயிரை சடுதியிலே
காவு கொண்டு செல்லுதே
கருநிற வெள்ளை வரி நுளம்பினாலே
கருகிப் போகுதே மனித இனம்.

(நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே.........)

3. விடி காலையிலும் பிற்பகலிலும் டெங்கு
கடியாகக் கடித்து கொல்லுதே - கொடிய
வைரஸ் டெங்கு வலுவாகப் பெருகுமே
வரண்ட உலர் வெப்ப நாடுகளிலே

4. எலும்பு முறிவுக் காய்ச்சல் என்றே மக்கள்
புலம்பி புலம்பித் திரியிறார் - டெங்கு
ஆர் என் வைரஸாம் அதற்கு
ஈ டீ ஸ் எகிப்தி என்றும் பெயராம்

(நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே.........)

5. மஞ்சள் வைரஸ் குடும்பமாம் - உலக
மனிதரைக் கொல்லவே வந்ததாம்
வெயிலும் மழையும் இரண்டிலுமே - டெங்கு
வேகமாய்ப் பெருகும் தொற்று வைரஸ் கிருமியாம்

6. கண்வலி காய்ச்சல் களைப்பு குருதிப்போக்கு
தொண்டைப்புண் உடல்வலி வாந்தியோடு
அறிகுறியாம் பசியின்மையும் குமட்டலும் - காய்ச்சல்
முறிக்குமாம் உடலை முழுதாகவே.

(நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே.........)

7. நிலவேம்புக் குடிநீர் பப்பாளி இலைச்சாறு பரசிட்டமோல்
மலைவேம்புச் சாறும் மருந்துவமாம் டெங்குக்கே
காலை மாலை கணக்காகக் குடித்து நுளம்பு
வலை போட்டு நீள உடை போட்டு காத்திடுவோம் நம்மையே

8. தடுப்பூசி இல்லையாம் டெங்கை நாமே
தடுத்திட வேண்டுமாம் - முன்னாளிலே
மலேரியா நும்பினால் மடிந்ததாம் மனிதகுலம்
இலேசுப்பட்டதல்ல இந்த டெங்கு நுளம்புமே

(நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே.........)

9. இளனிக் கோம்பை, தேங்காய் சிரட்டை, யோகட் ஐஸ்கிறீம் கப்,
பழைய ரயர்கள், தகரப்பேணி, குப்பைக்குவியல் பிளாஸ்ரிக் கழிவுகள்
அழுக்கு நீர்நிலைகள், மதகு, பாலம், கிணற்றடி, கூரைப் பீலிகள்,
நுளம்பு வாழும் நூதன இடங்களாமே

10. நித்தம் எங்கள் வீடு வளவு சுத்தமாக்குவோம்
நிலத்தில் புதைப்போம் எரிப்போம் வீட்டுக் கழிவுகளையே
குழுக்களாகச் சேர்வோம் வீதி வாய்க்கால் எல்லாம்
அழுக்கு நீரை அகற்றியே அழகு கிராமம் ஆக்குவோம்

(நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே.........)

11. சண்டையிலும் செத்தனர் சமாதானத்திலும் சாகின்றனர் - நிலச்
சரிவிலும் செத்தனர் தண்ணீரிலும் சாகின்றனர் - மனிதர்
வாகனத்தாலும் சாகின்றனர் வறுமையிலும் சாகின்றனர்
தாகத்தாலும் சாகின்றனர் டெங்கு நோயாலும் சாகின்றனரே!




12. இடரிலிருந்து மனித குலத்தை மீட்பவராவோம்
உடனடியாகவே ஒன்றுகூடி உழைப்பவராவோம் - எங்கள்
வீட்டிலிருந்து தெருவிலிருந்து கிராமத்திலிருந்து
நாட்டிலிருந்து டெங்கை ஒழிப்போம் டெங்கை ஒழிப்போமே.

(நாட்டோரே வீட்டோரே நகரத்தோரே.........)

# எம்மவர்கள் மீண்டெழுவதற்கு கல்வி அறிவும் விடாமுயற்சியும் உறுதுணையாகிறது

மாண்புமிகு சி.வி.விக்னேஸ்வரன்



எமது நாட்டில் இடம்பெற்ற நீண்ட கால கொடிய யுத்தத்தின் விளைவாக உயிர்களை இழந்து பொருட்செல்வங்களை இழந்து நிர்க்கதியான நிலையிலும் எம்மவர்கள் வெட்ட வெட்டத் தழைக்கின்ற வாழைமரங்களைப் போல் இன்றும் தலைதூக்கி மீண்டெழுந்துள்ளார்கள் என்றால் அவர்களிடமுள்ள அடிப்படைக் கல்வி அறிவும் விடாமுயற்சியுமே காரணமாகும்.

கல்வியில் மேம்பட்டவர்களுக்கு உலகின் எந்த மூலைமுடுக்குகளுக்குச் சென்றாலும் அங்கு எல்லாச் சிறப்புக்களும் கிடைக்கப்பெறும். "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற கோட்பாட்டிற்கு அமையவே தமது வறுமையான நிலையிலும் அதனை மறந்து எமது மாணவ மாணவியர் பலர் கல்வியில் சிறப்புடன் செயற்படுகின்றார்கள். மாணவர்கள் அனைவரும் உங்களுடைய கல்வி நடவடிக்கைகளில் சிறப்புறத் திகழ வேண்டும். அதற்கு அல்லும் பகலும் நீங்கள் பாடுபட வேண்டும். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" இதை மறவாதீர்கள்.

உங்களுக்குக் கல்வி போதிக்கின்ற ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும் சிரத்தையுடனும் உங்களுக்குக் கற்றுத் தந்தாலேயே நீங்கள் இன்று நல்ல நிலையை அடைந்துள்ளீர்கள். உங்கள் ஆசிரியர்களை எக்காலத்திலும் மறவாதீர்கள்.

உங்கள் கற்பித்தல் முறைமையானது வெறும் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நிகழ்வாக அமையாது அறிவுத் தேடலாகவும் அதற்கு உதவுகின்ற வழிமுறையாகவும் அமைய வேண்டும் என்பதே எனது பெருவிருப்பமாகும். மேலதிக வாசிப்பானது பரீட்சைகளில் நன்றாகச் செய்ய அத்தியாவசியமானது.

"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்பார்கள் உங்கள் பாடப்புத்தகங்களுக்கு மேலாக அதனுடன் தொடர்புடைய மேலதிக நூல்களை வாசிக்க மறந்துவிடாதீர்கள். அவை உங்களைப் பரீட்சைகளில் நல்ல அடைவுகளைப் பெற வழிவகுக்கும்.

## பவளவிழா கொண்டாடும் தமிழ்சங்கத்தை வாழ்த்தி ஆதரவு நல்குவோம்

கொழும்புத் தமிழ் சங்கம் தனது 75வது ஆண்டில் காலடி எடுத்து வைத்து பவளவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருப்பது தமிழ் பேசும் மக்கள் அனைவர்களுக்கும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும். பவளவிழா ஆண்டில் கட்டட நிர்மாணப் பணியையும் முன்னெடுக்கவுள்ளார்கள். அந்தக் கைங்கரியத்தை நிறைவேற்ற எம்மவர்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் தம்மாலான ஆதரவினை நல்க வேண்டும் என்றும், உலகம் எங்கும் பரந்து வாழும் 'தாயக ஒலி வாசகப் பெருமக்கள் கைகொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

தொடர்பு : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
7, சங்கம் ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை
தொலைபேசி : 0112363759, 0112058220

- இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்

மங்கையர் தின எண்ணக்கரு

# இல்லறத்தில் விட்டுக்கொடுப்பின் முக்கியத்துவம்

சமூக உறவுகளைப் பொருளாதார நிலைகளே நிர்ணயிக்கின்றன.

ஒரு குடும்பத்தில் அமைதிக் குறைவுக்கும் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது குடும்பத்தில் தலைமைத்துவம் முற்றிலும் ஒருவர் கையிலும் அவரில் மற்றைய குடும்ப அங்கத்தினர்கள் முற்றிலும் தங்கியிருப்பதுமே ஆகும்.

உழைப்பாளி ஒருவராக இருக்க அவர் யாரோ, அவரிடமே தலைமைத்துவமும் அதிகாரமும் இருப்பிடமாக இருக்கின்றதைக் காண்கின்றோம். அது அந்தக் குடும்பத் தலைவனாக இருக்கும் நிலையிலேயே ஆணாதிக்கம் உருவெடுக்கின்றது.

ஒரு குடும்பத்தில் இல்லத்தரசியும் உழைப்பாளியாக இருக்கும் நிலையில் இல்லறத்தில் அவள் தனது கடமைகளை முழுமையாகச் செயற்படுத்த முடியாத நிலைமையும் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், பராமரிப்பு முதலான செயற்பாடுகளின் மீது ஒரு முழுமையான செம்மையான மேற்பார்வை அமைய முடியாத நிலையிலும் குடும்பத்தில் அமைதிக் குறைவு பிரச்சினைகள் எழத் தொடங்குகின்றன.

மேலும் வெளிநாடுகளுக்குச்சென்று நிரந்தர வதிவிடம் பெற்று விட்ட குடும்பங்களில் குடும்ப அங்கத்தினர் எல்லோருமே தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யக்கூடிய வாறு உழைப்புத் தேடிக் கொள்ளக் கூடிய வசதிகள் இருப்பதால் இங்கு இல்லறத்தில் தலைமைத்துவத்துக்கும் குடும்ப அங்கத்தவர்களது அவர் மீதான மரியாதைக்கும் இடம் இல்லாமல் போகின்றது. அதனூடே குடும்ப உறவுகளிடையே தங்கியிருத்தல் (Depending) என்ற சொல்லுக்கு இடமில்லாமல் போய் விடுகின்றது.

இல்லறத்தில் அங்கத்துவர் ஒவ்வொருவரும் அவரவர் செயற்பாட்டிலும் அதன் மீதான முழுமையான கவனத்திலும் தம் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் நிலையில் இல்லறத்தில் அன்னியோன்னிய குடும்ப உறவு தகர்க்கப்படுகின்றது.

பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காகத் தொழில் பார்க்க குடும்பத்தலைவனோடு மற்ற அங்கத்தவரும் வெளியில் காலடி வைத்த விட்ட கணமே, அவர்கள் தமது குடும்ப உறவும் இல்லற அமைதியும் தொடர்ந்து சீராக இருக்க வேண்டும் என்பதை மனதில் இருத்திக் கொண்டு செயலாற்றத் தொடங்க வேண்டும்.

குடும்பத்தலைவன் என்னை மற்றைய அங்கத்தவர்கள் மரியாதை செய்கிறார்களில்லை என்ற ஒரு குற்ற உளவியல் நிலைக்குத் தள்ளப்படுவதால் எப்பொழுதுமே மனைவியிடத்தும் ஏனையவரிடத்தும் குற்றுங்காண்பவனாய் செயற்பட ஆரம்பிக்கின்றான்.

இவ்வாறான ஒரு உளவியல் நிலை பொருளாதாரம் தொழில் என்பவற்றால் மட்டுமன்றி கல்வித் தராதரத்தாலும் குடும்பத் தலைவனிடம் காணப்படுவதை நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கின்றோம்.

'வாழ்க்கையில் வாழ வழி அமைத்துக் கொடுக்கும் எவ்வகை ஆற்றலும் ஒருவனது தகைமையே.

இருந்தாலும் சான்றிதழ் கற்கை நெறிகளில் தேர்ச்சி பெற்ற ஒருவர் மேம்பட்டவராகப் பார்க்கப்படுகின்றார். அத்தோடு ஒழுக்கம் பண்பாடு செல்நெறி, கற்பிக்கும் கற்கை நெறிகள் மனிதனது வாழ்க்கையில் அனைத்து கோணத்திலும் சிறப்பைக் கொடுப்பதோடு அடுத்த பிறப்பிலும் அதனைக் கொண்டு செல்லும் என்பது ஆன்மீகக் கோட்பாடாகும்.

மனைவியோ குடும்பப்பொருளாதார நிலை பிள்ளைகளின் மீதான கவனம் வேலைத் தளத்தில் உத்தியோக பளு வீட்டுக்குத் திரும்பினால் வீட்டு வேலைகள் என அனைத்துக்கும் மத்தியிலான ஒரு பலத்த உளவியல் உந்துதலில் மன அழுத்தத்தில் கடமையாற்ற வேண்டிய நிலையில் கணவனின் குற்றச்சாட்டுக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியளாகின்றாள்.

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய காலத்தில் பிள்ளைகள், இப்பிரச்சினைகளையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டியவர்களாகின்றனர். தமது பாடசாலை வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் அவர்களுக்குத் தந்தையிடமோ தாயிடமோ இருந்து உதவியும் மேற்பார்வையும் கிடைப்பதில்லை.

எனவே இல்லறத்தில் அமைதி நிலவ அனைத்தும் சீராகச் செயற்பட முக்கியமாக விட்டுக் கொடுப்பே இங்கு அவசியமாகிறது.

பொருளாதார நிலைமையினால் தொழில் பார்ப்பதற்காக மனைவி செல்கின்றாள் என்பதை மனதில் இருத்தி குடும்பத் தலைவனே இங்கு அனைத்து விடயங்களிலும் விட்டுக் கொடுப்பைக் கையாள வேண்டும்.

தனக்கே தலைமைத்துவம் அதிகாரம் மதிப்பு மரியாதை அனைத்தும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும்.

இல்லறத்தில் அனைவருமே அவரவர் பங்களிப்பில் மிகுந்த கவனத்தோடும் அதனூடேயான மன அழுத்தத்துடனும் செயலாற்றுவதை உணர்ந்து எல்லோரும் இல்லறத்தின் சீர்மைக்கும் சிறப்புக்கும் முன்னே சமமான மட்டத்திலேயே உள்ளோம் என்ற உணர்வையும் அனைத்திலும் சம பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற உணர்வையும் குடும்பத் தலைவன் உறுதிக்கொண்டு நடைமுறைப்படுத்தும் போது ஏனைய அங்கத்தவர்களும் அதனைப் பின்பற்றுபவர்களாய் இல்லறத்தில் அமைதியும் சிறப்பும் செழித்தோங்க வழிவகுப்பவர்கள் ஆவார்கள் என்பது நிச்சயம்.

வெறுமனே கருத்துக்களை மட்டுமே உயர்வாக வைத்துக்கொள்ளாது மனதையும் நடவடிக்கைகளையும் அதற்கேற்ப வைத்துக் கொள்பவனே அமைதிகாண முடியும்.

ஒருவன் முழுமை பெற முடியாது நிலைத்து போவதற்குக் காரணமே அவனுடைய மனம் தான். ஒருவரது உள்ளத்தை அவரே பரிசீலித்துத் தன்னைப் போலவே அடுத்தவரையும் அவரது விருப்பங்களையும் நாட்டங்களையும் நேசித்து விட்டுக்கொடுத்து ஒவ்வொருவரும் சுய முயற்சியில் தமது மனதை அலையவிடாது கட்டுப்படுத்த வேண்டும்.

தனிப்பட்ட ஒவ்வொரு அங்கத்தவரின் முயற்சியும் மொத்தத்தில் முழுமை பெற்று இல்றைத்தின் முழுமையான அமைதிக்கு வழி வகுக்கும்.

எனவே ஒட்டு மொத்தமான ஒரு பார்வையில் ஒரு இல்லத்தின் சிறப்பில் விட்டுக் கொடுப்பே முக்கியத்துவம் வகிக்கிறது எனக் கூறலாம்.

திருமதி.இராஜினி தேவராஜன்
தெகிவளை

ஹேமா ஹரிதீபன்

# முயலின் குதிரைச் சவாரி

குதிரையும் முயலும் காட்டில் வசித்து வந்தன. குதிரையும் முயலும் ஒருநாளும் பேசியது கிடையாது. ஆனால் முயலுக்கு குதிரையுடன் பேச வேண்டும். பழக வேண்டும் அதன் முதுகில் ஏறிச் சவாரி செய்ய வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது.

ஒருநாள் குதிரை புல் மேய்ந்து கொண்டிருந்தது. முயல் மெதுவாக பின்னால் நின்ற குதிரையின் முதுகில் ஏறுவதற்குப் பாய்ந்தது. அப்பொழுது குதிரை சற்று நகர்ந்தது. முயல் கீழே விழுந்தது.


வேறு ஒரு நாள் குதிரை நின்று கொண்டே தூங்கியது. முயல் குதிரையின் முன் நின்று துள்ளித் துள்ளிப் பார்த்தது. குதிரை அசையாது தூங்கியது. முயல் முதுகில் ஏறுவதற்கு பாய்ந்தது. முயலின் கால்கள் குதிரையின் வயிற்றுப் பகுதியில் பட்டதும் குதிரை நித்திரையில் இருந்து எழுந்து துள்ளி ஓடியது. முயல் கீழே விழுந்தது. ஆ.... ஆ... குதிரையில் எப்படிச் சவாரி செய்வது என முயல் யோசனை செய்தது.

ஒரு நாள் குதிரை படுத்திருந்த இடத்தில் இருந்து எழுந்திருக்கவில்லை. காலையில் இருந்து மாலை வரை ஒரே இடத்தில் படுத்திருப்பதைப் பார்த்த முயல் குதிரை சாப்பிடுவதற்கு உணவு கொண்டுவந்து கொடுத்தது. பசியில் இருந்த குதிரை முயல் கொண்டு வந்த உணவை சாப்பிட்டது.

முயல் மெதுவாக கதை கொடுத்தது. அப்பொழுது குதிரை சொன்னது எனது காலில் காயம். இதனால் என்னால் நடக்க முடியவில்லை என்றது. முயல் மான் டாக்டரை அழைத்து வந்து மருந்து கட்டியது. இரண்டு நாட்களுக்குப் பின் குதிரையின் கால் குணமாகியது. அப்பொழுது குதிரையும் முயலும் நல்ல நண்பர்கள் ஆகின. எங்கு சென்றாலும் ஒன்றாகச்செல்வார்கள்.

ஒரு நாள் இருவரும் உணவு தேடி நீண்ட தூரம் சென்றார்கள். திரும்பி வரும் பொழுது மழை வரும் போல் இருந்தது. மழை வரும் முன் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று குதிரையும் முயலும் ஓடத் தொடங்கினார்கள். குதிரை விரைவாக ஓடியது. சிறிது தூரம் சென்ற பின் திரும்பிப் பார்த்தது. முயல் இன்னும் ஓடிவந்து கொண்டிருந்தது. குதிரை ஓடுவதை நிறுத்திவிட்டு முயல் வருவதைப் பார்த்துக்கொண்டு நின்றது.

இப்பொழுது இருவரும் ஒன்றாக வீட்டை அடைந்தார்கள். குதிரையின் முதுகில் இருந்து முயல் இறங்கியது.



# வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்

மானிட வாழ்வியலிலே குடும்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் சமூகத்துடனும் ஒருங் கிணைந்து வாழ்தலே மானிட வாழ்க்கையின் பண்பாகும். மானிட வாழ்வியலுக்கு வழிகாட்டி யாக, நெறிப்படுத்துவனவாக, உந்து சக்தியாக, உறுதுணையாக, இருப்பது எமது முன்னோர்கள் கூறிவைத்த வாக்கு என்று குறிப்பிடலாம்.

ரிஷிகள், ஞானிகள், மகான்கள், நாயன் மார்கள், ஆழ்வார்கள், அறிவுச் செம்மல்கள் முதலானோரின் வாக்கு பிரசாதமே எம்மை வாழவைக்கின்றது. நமது பாரம்பரியம் பண்பாடு கட்டுக்கோப்புக்கள், கலை, கலாசாரம் அனைத்தும் மேற்கூறப்பட்டவைகளால் அருளப்பட்ட அருள் வாக்காகும்.

வாக்கு, வார்த்தைப் பிரயோகம், செம்மை யாக இருக்கும் போது தான் மனம் செம்மையாக இருக்கும். இதனை ஔவையார் அழகாகச் சொல்லியுள்ளார். 'வாக்குண்டாம் நல்ல மன முண்டாம்' எனக் கூறியுள்ளார். 'யாகாவ ராயினும் நா காக்க' என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். நாவடக்கம் என்பது மிக வேண்டிய ஒன்றாகும். நாவைக் காக்கத் தெரியாதவர்கள் தமது வாழ்வைப் பாழாக்கிக் கொள்கின்றனர். 'தீயினால் சுட்ட வடு மாறிவிடும் நாவினால் சுட்ட வடு மாறாது' இது முதுமொழி நாவினால் நாம் பிரயோகிக்கும் வாக்கு (வார்த்தைகள்) அம்பு போன்றது. சுட்டெரிக்கும் சூரியக் கதிர் போன்றது. புராண இதிகாரச வரலாறுகளில் சாபமிடல் என்ற பதங்களைக் காணலாம். மகா பாரதத்தில் கர்ணன் தான் ஒரு அந்தணன் எனக் கூறி பரசுராமரிடம் பிரமாஸ்திர வித்தையைப் பயின்றதனையும் கர்ணன், சத்திரியன் என்றுணர்ந்த பரசுராமர் கர்ணனுக்கு சாபமிட்டதனையும் மகாபாரத்தில் கூறப்படுகிறது.

அரிச்சந்திர புராணத்தில் தனது வாய்மையைக் காப்பாற்ற இறுதிவரை தளராது நின்ற அரிச்சந்திரன் கதை சொல்லப்படுகிறது. தனது நாடு, நகர், மனை, மனைவி, பிள்ளை அனைத்தையும் இழந்து ஈற்றின் வாய்மையே வெற்றி பெற்ற வரலாற்றினைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரத்திலே கோலன் பாண்டிய மன்னனின் அணி செய்யும் பொற்கொல்லனால் (பொற்கொல்லன் தனது களவை மறைப்பதற் காக) கள்வன் என குற்றம் சாட்டப்படுகின்றான். பொற்கொல்லன் மன்னனிடம் சென்று தான் சிலம்பு திருடிய கள்வனை பிடித்து வைத்துள் ளதாக கூறுகின்றான். அதற்கு மன்னன் காவலர் களை அழைத்து கள்வனைக் கொண்டு சிலம்பி னைக் கொணர்க என்று பணிக்கிறான்.

மன்னன் இங்கே கள்வனைக் கொல்லு மாறு ஆணையிடவில்லை. களவாடிய கள்வனை சிலம்போடு கூட்டிவாருங்கள் என்று தான் பணித்தானாம்.

ஆனால் அவ்வார்த்தை விளக்கம் அறியாது கோவலனை காவலர்கள் கொன்று விட்டனர். எனவே வாக்கு (வார்த்தை) எந்தள விற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதனை நாம் அறியக்கூடியதாயுள்ளது.

நாம் அன்பான வார்த்தைகளை பிரயோ கிக்கும் போது பெறுபேறு அன்பாகவே அமையும். வன்சொற்களைப் பிரயோகிக்கும் போது பெறுபேறு வன்மையாகவே அமையும்.

நாயன்மார் பாடல்களை எடுத்து நோக் கினால் அவர்களது பாடல்கள் இறைவனோடு சேர்வதையே அவர்கள் விரும்புவதாய் அமைந்

துள்ளன. இதனால் அவர்கள் இறைவனோடு இணைந்தார்கள்.

நீ எதுவாக எண்ணுகிறாயோ அதுவாகவே மாறிவிடுவாய் என்று ஞானியர்கள் குறிப்பிட்டுள் ளனர். நல்ல வார்த்தைகளை உச்சரிக்கும் போது நல்லவர்களாகவே இருப்போம். தீய வார்த்தைகளை உச்சரிப்பவர்களாக இருந்தால் தீயர்களாகவே மாறிவிடுவோம்.

எந்த ஒருதாக்கத்திற்கும் சமமான எதிர்த் தாக்கம் உண்டு இது விஞ்ஞான தத்துவம்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

"நாம் செய்த வினைக்கேற்பவே எமது பிறப்பும் அமைந்துவிடுகிறது. இவையெல்லாம் சித்தார்ந்த விளக்கங்கள்."

மானிடராகிய நாம் கொண்டுள்ள நல்ல மனதை நல்ல வழியில் பயன்படுத்த நல்ல வார்த்தைப் பிரயோகம் முக்கியமானது.

நல்வாக்கும் நல்மனமுமே துன்பமில்லா வாழ்க்கைக்குத் துணை நிற்கும்

எஸ்.மகேந்திரராஜா
ஓய்வுபெற்ற மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
திருகோணமலை.

நகைச்சுவைக் கதைகள்

# "மந்திரியின் மதிநுட்பம்!"

ஒரு நாட்டின் முக்கிய அமைச்சர் ஒருவர் உள்ளூர் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி ஒன்றுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டி ருந்தார்.

மாலை, மரியாதை, மேள, தாளங் களுடன் அழைத்து வரப்பட்டவர் - ஆள், அம்பு, படை சூழ தமதிருக்கையில் அமர்ந்தார்.

போட்டி ஆரம்பமானது. இறுதிப் போட்டி என்பதால் இரண்டு தரப்பினருக்கும் கடுமையான போட்டி.

உதைபந்தாட்டம் பற்றி எதுவும் தெரியா விட்டாலும் சனக்கூட்டம் கரகோசம் செய்யும் போதெல்லாம் அமைச்சரும் கைதட்டி, ஆரவாரம் செய்தார். தமது உதவியாளர்களையும் கைதட்டப் பணித்தார்.

தொண்ணூறு நிமிட விளையாட்டு. தலைக்கு மேல் கிடந்த தமது எத்தனையோ அலுவல்களையும் விட்டு விட்டு பொறுமையாக போட்டியைப் பார்த்தனர்.

'போட்டி' முடிவுக்கு வந்ததும் தமது பிரதம உதவியாளரை அருகில் அழைத்து "என்னடாப்பா நீ எனக்குச் சொல்லவே இல்லையே நாட்டில் இவ்வளவு பஞ்சமென்று. ஒரு பந்துக்கு இருபத்தி இரண்டு பேர் விழுந்து விழுந்து சண்டை பிடிக்கிறார்களே! உடனே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பந்து வாங்கிக்கொடும்" என்று உத்தரவு போட்டுவிட்டு தமது தலைக்கு மேல் கிடந்த வேலைகளைக் கவனிக்க தமது கப்பல் போன்ற காரை நோக்கிப் புறப்பட்டார்.

இத்தனைக்கும் அன்னார் அந்நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சராகும்.

- இனுவை இரகு

# மனிதநேயமும் ஆன்மநேயமும் தாவரங்களின் பண்பும் பயனும்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

கொடைக்குக் கர்ணன், பொறைக்குத் தருமன், வில்லுக்கு விஜயன். மல்லுக்கு வீமன் சொல்லுக்கு அரிச்சந்திரன் என்ற கூறுவது இதிகாசமரபு. தமிழ் நாட்டின் கடையெழுவள்ளல்களுள் ஒருவனும், மனித நேயம், ஆன்மநேயம், இரண்டையும் ஒருங்கே கொண்டிருந்த குறுநில மன்னன் என்ற வகையில் ஏனைய ஆறு வள்ளல்களிலிருந்தும் சற்று வேறுபட்டவனாகவே உள்ளான் பாரி வள்ளல். கொடைக்குப் பாரி என்று சிறப்பித்துக் கூறுவது தமிழ் மரபு ஆகும்.

## மனிதநேயம், ஆன்ம நேயம்

மனித நேயம் என்பது மனிதர் மீது நேயம் செலுத்துதல் ஆகும். நேயம் என்ற சொல், அன்பு, அருள், விருப்பம், கருணை, பரிவு, பாசம், இரக்கம், ஆர்வம், ஈரம் ஆகிய பலசொற்கள் கொண்டுள்ள கருத்துக்களையும் பொருள்களையும் உள்ளடக்கிய பண்புச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நண்பன், பகைவன் என்ற போதமின்றி, எல்லா மனிதர்களிடத்தும் நேயம். அன்பு, கருணை செலுத்துவது மனிதநேயம். எல்லா உயிர்கள் மீதும் அன்பு, கருணை செலுத்துதல், ஆன்மநேயம் "எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியுள்ளே ஒத்துரிமையுடையவராய்..." என்று இராமலிங்க வள்ளலார், கூறுவது, ஆன்ம நேயத்திற்கு வரைவிலக்கணமாக அமைகின்றது. மனித நேயம், ஆன்ம நேயம் இரண்டையும் வாழ்வில் பேணிக்காத்து ஓம்பி அறவாழ்வு வாழ்ந்தவர் பாரிவள்ளல். ஓரறிவுமட்டும் படைத்த தாவர இனத்தைச் சேர்ந்த முல்லைக் கொடி படருவதற்குக் கொழு கொம்பாக தமது பொற்றேரையே ஈய்ந்து தமது ஆன்ம நேயத்தை உலகத்தவர்க்கு உயர்த்திப் பெருமைகொண்டவர் பாரி வள்ளல்.

"ஈதல் அறம்" "அறஞ்செய விரும்பு" ஈதல் செய்ய வேண்டும் என்று மனம் விரும்புதல் ஆரம்ப நிலை. மனிதர் மற்றும் ஓரறிவு முதல் ஐயறிவு வரை படைக்கப்பெற்ற எல்லா உயிரினங்களைச் சார்ந்தவைகளுக்கும் எவ்வித வேற்றுமைகளையும் கருத்தில் கொள்ளாது அவற்றின் தேவை உணர்ந்து, ஈதல் செய்வது அறம். அத்தகைய அறம் செய்பவர்கள் எதையும் கைம்மாறாக எதிர்பார்ப்பதில்லை. புண்ணியம் சேரும் என்றுகூட நினைப்பதில்லை. ஆன்ம நேயம் தான் ஈதல் செய்தவற்கு உந்துசக்தியாக விளங்குகிறது.

இத்தகைய முறையில், செய்யப்படும் ஈதல், அறம் ஆகிறது. ஆன்ம நேயத்தின் உந்துதலால், ஈதல் செய்பவர், வள்ளல் என உலகத்தவரால் போற்றிப்படுகிறார். பாரி வள்ளல், செயற்கரிய செயலைச் செய்த பெரியர், வள்ளல் ஆவார்.

பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி என்னும் எழுவர், கடை எழு வள்ளல்கள் ஆவர். தமிழ் நாட்டில் முடியுடை வேந்தர்களான, சேர, சோழ, பாண்டியர், செங்கோல் ஏந்தி, அரசு செலுத்தி வந்த தமிழரின் பொற்காலத்தில் பாண்டிய நாட்டில் முந்நூறு ஊர்களைக் கொண்ட பறம்பு நாட்டுக்குப் பாரி என்னும் குறுநில மன்னன் ஆட்சித்தலைவனாயிருந்தான். அப்பாரி மன்னன் வரம்பில்லாமல் வாரி வழங்கியவன். அதனால் வள்ளல் என அழைக்கப்படலாயினான்.

பாரி வள்ளல் தமது வாரி வழங்கும் ஈதல் அறச் செயலை மனிதருடன் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. அதற்கும் அப்பால் சென்று எல்லையை விரிவுபடுத்தித் தாவரச் சங்கமத்துக்கள் செடி கொடிகள் என்பவற்றிற்கும் தமது அன்பையும் கருணையும் வழங்கி மகிழ்ந்தான்.

## அன்பும் கருணையும்

அன்பும் கருணையும் மனித நேயம், ஆன்மநேயம் என்பவற்றின் பண்பும் பயனும் ஆகும். ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில் இருப்பவை அன்பும் கருணையும்தான். அவற்றை மனிதர்களுடன் மாத்திரம் பகிர்ந்து கொள்வது மனித நேயம். நீங்கா நிறை நிலையாக இறைவனை எங்கும் எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிடத்தும் உணர்வதும் அதற்கேற்ற பரந்த விரிந்த மனநிலையில் எல்லா உயிர்களுக்கும் வேற்றுமை காட்டாது தொண்டாற்றி உதவுதல். அன்பும் கருணையும் இணையப்பெற்ற ஆன்மநேயம் ஆகும்.

அருட்செல்வம், பொருட்செல்வம், ஓர் இடத்தில் சங்கமித்துக் காணப்பட்ட பெருமைக்குரியவன் பாரி வள்ளல். தன்னிடம் வந்த புலவர்களுக்கும் பாணர் பாணினிகளுக்கும் இரவலர்களுக்கும் இல்லையென்னாது ஈதல் செய்து பேறுபெற்றவன். ஊரின் நடுவே பழுமரம் பழுதாற்போன்று பலருக்கும் பயன்தரும் பாரி வள்ளல், ஒருநாள், தமது பரிவாரங்கள் புடைசூழத் தேரேறி, நாட்டு வளம் கண்டு மீளும் வழியில் பற்றிப் படர்வதற்குக் கொழுகொம்பின்றி நிலத்தில் கிடந்து காற்றில் அங்குமிங்கும் ஆடி அசைந்து வருந்திக் கொண்டிருக்கும் முல்லைக் கொடியைக் கண்டு தானும் மனத்துயரடைந்தான். முல்லைக்கொடி பரிதவித்த காட்சி பாரியின் உள்ளத்தை நெகிழ வைத்தது. சற்றுநேரம் ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்த பாரிவள்ளல் தன் வள்ளல் பண்பினை செடி கொடிகள் மற்றும் தாவரசங்கமித்துக்களுக்கும் விரிவுபடுத்த விரும்பினான். இங்குதான், பாரியின் வரம்பிலா ஆன்மநேயம் செயல்வடிவம் பெறுகிறது.

## பாரி வள்ளலின் செயற்கரிய செயல்

தேரை விட்டுக் கீழே இறங்கிய பாரி, முல்லைக் கொடியை நோக்கி விரைந்தான். சற்று நேரம் அதனையே உற்றுப்பார்த்த பாரியின் கண்களில் நீர் மல்கியது. பிற உயிர்களின் துன்பங்களைக் கண்டு பொறுக்கமாட்டாதது பாரியின் கருணை உள்ளம். முல்லைக் கொடியையே நோக்கியபடி நின்ற பாரிவள்ளல் மென்மையான ஒலியொன்று தம் காதில் கேட்பதை உணர்ந்தான். அது வேறொன்றுமில்லை. முல்லைக் கொடியின் முனகல் ஒலிதான். "கொற்றவனே, கொடை வள்ளலே, என் துர்ப்பாக்கிய நிலையை நன்றாகப் பாருங்கள். நானும் ஓர் உயிரினம் தான். எனக்கும் உயிர், உணர்வு, இன்பம், துன்பம் எல்லாம் உண்டு. மானம், மரியாதை, சூடு, சொரணை எல்லாம் நிறையவே உண்டு. பற்றிப் படர்வதற்குக் கொழுகொம்பு இல்லாமல் பரிதவிக்கின்றேன். துணையின்றித் தனிமையில் உள்ள என்னைச் சுற்றிச் சுற்றிக் கடும் காற்றும், கொடும் விலங்குகளும் தாக்கி வருகின்றன. என் உற்றார்,

உறவினராலும் எனக்குப் பாதுகாப்பு வழங்க முடிவதில்லை. காரணம் யாவரும் அறிந்ததே. நடமாடும் இயல்பு அற்றவர்கள் நம் குலத்தவர். இத்தகைய கொடுமைகள் உன் நல்லாட்சியில் நடைபெற அனுமதிக்கலாமா? நீதிவழுவா நெறிமுறையில், நல்லாட்சி செய்து வரும் தங்களுக்குச் சிறியேன், சொல்லித்தான் தெரியவேண்டும்மென்பதில்லை. நான் கேவலம், ஒரு தாவரம் அதிலும் கொடிதானே! என்று எங்களை அலட்சியம் செய்து வருகிறார்கள். ஆறிவு படைத்த மானுடர்கள்.

மனிதர்கள், தாவரங்களின் கருணை, கிடைக்கப் பெறாதிருந்தால் சில வினாடிகள் தன்னிலும் உயிர் வாழமுடியாமல் மூச்சுத் திணறி இறந்திருப்பார்கள்! அவர்கள் வெளியேற்றும் அசுத்தக்காற்றை, உள்வாங்கித் தூய்மைப்படுத்தி, வாழ்விற்கும் பிராண வாயுவாக மனித இனத்திற்கு இலவசமாக வழங்கி வருபவை, தாவரங்கள் தானே என்ற பேருண்மையை மனித இனம் மறந்தும் மறைத்தும் வருகிறது உண்மையை அசட்டை செய்வதும் செய்நன்றி மறந்தலும் மனித இனத்திற்கு ஒன்றும் புதிதல்லவே! இவ்வாறு முல்லைக்கொடி மோன நிலையில் உணர்த்தியதை பாரி தெளிவாகப் புரிந்து கொண்டான். உடனடியாக முல்லைக் கொடியின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு அதன் துயர்தீர்க்கும் பணியிலும் இறங்கினான்.

"மாரியன்ன பாரி," என்ற புலவரின் புகழுரைக்கிணங்க கைம்மாறு கருதாது முல்லைக்கொடிக்குத் தனது விலைமதிப்பற்ற தேரையே கொழுகொம்பாக அதனைப் பற்றிப்படர வழங்கிவிட்டு கால்நடையாக நடந்து சென்னறே அரண்மனையை அடைந்து, தனது கொடைவள்ளல் தன்மையின் உச்சியையும் தொட்டுவிட்டான்.

பாரி நிகழ்காலத்தைப் பற்றி மாத்திரம் சிந்தித்துச் செயற்படுபவன் அல்லன். எதிர் காலத்தில் வாழப்போகின்ற மக்களின் வாழ்க்கை வளங்கள், நலங்கள் என்பவற்றைப் பாதுகாத்து இயற்கை வளங்கள் மாசு அடையாமலும் அழிந்து போகாமலும் அவற்றின் நலம் காத்து ஓம்பி அடுத்து வருகின்ற சந்ததியினரின் பயன்பாட்டிற்குக் கையளித்தல் நல்லாட்சியில் நாட்டம் உள்ள ஞானியர் தரத்திலுள்ள ஆட்சித்லைவர்களின் தலையாய கடமையும் நீதியும் அறமும் ஆகும். இந்த மாபெரும் உண்மையையும் பாரிவள்ளல் உணர்ந்திருந்தமையினாலேயே தனது விலை மதிப்பற்ற தேரையே கொழுகொம்பாகப் பயன்படுத்திப் படருவதற்கு ஈய்ந்து முலைக்கொடியைப் பாதுகாத்து அதனூடாக இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய இன்றியமையாமையை உலகத்தவர்க்கு உணர்த்தி இயற்கைப் பாதுகாப்புத் தொடர்பான முதற்பாடத்தைச் செயல்மூலம் நடத்திக் காட்டிய பெருமைக்குரியவனான் பாரி வள்ளல். இது செயற்கரிய செயல் அல்லவா!

நல்லார்களின் வாழ்க்கைத் தத்துவத்தை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும் பொதுநலமும் தான், எங்கும் எச் செயலிலும் அமைந்திருக்கக் காணலாம்.அத்துடன் எதிர்காலச் சுபீட்சத்தையும் விருத்தியையும் உள்ளடக்கியதாகவும் இருக்கும். தனக்கும் பிறருக்கும் தற்காலத்திலோ எதிர்காலத்திலோ துன்பம் வருவிக்காத எண்ணங்கள் பேச்சுக்கள் செயல்கள் என்பவற்றை உள்ளடக்கம் ஆகக் கொண்ட வாழ்க்கை நெறியாகவும் விளங்கும். அத்தகைய வாழ்க்கைத் தத்துவத்தைத் தமது ஆக்கிக்கொண்ட பெருமைக்குரியவன் பாரி வள்ளல்.

தாவரங்கள், மனிதர்களுக்கும், உலகின் இருப்புக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பல விதங்களிலும் உதவுகின்றன. வெட்பதட்ப நிலைமைகளைச் சமன் செய்து சீராக்குகின்றன. மனிதர்கள் சுவாசிக்கும் ஒட்சிசன் (பிராண வாயு) வாயுவை வழங்கி, அவர்களை, உயிர் வாழச் செய்கின்றன.

மனிதர்கள் வெளியேற்றுகின்ற காபனீரொட்சைட் (கரியமலவாயு) என்னும் அசுத்த வாயுவைத் தாம் சுவாசிக்கும் ஒவ்வொரு தடவையும் உள்ளவாங்கித் தாமும் உயிருடன் வாழ்ந்து அதனைச் சுத்திகரித்து ஒட்சிசன் வாயுவைத் தாவரங்கள். மனிதர்கள் சுவாசித்து உயிர் வாழ்கின்றனர். இத்தகைய பரோபகாரிகளாக விளங்குபவை, தாவரங்கள். மனிதர்கள் பூமியில் தோன்றுவதற்குப் பல கோடி ஆண்டுகளுக்குமுன், தாவரங்கள் தோற்றம் பெற்றதன் முக்கிய காரணம் மனிதர்கள் தோன்றியவுடன் அவர்களின் முதற் தேவையான ஒட்சிசன் வாயுவை வழங்கி உயிர் வாழ்விப்பதற்காகவேயாகும். தாவரங்கள் இல்லையென்றால் மனித இனம் இல்லை என்ற நிலையே ஏற்பட்டிருக்கும்.

தாவரங்கள், பூமி அதிக வெப்பமடையாமல் தடுக்கின்றன. ஓசோன் படையில் ஓட்டை விழுந்து விட்டது. அதனால் வளிமண்டலம் அதிக வெப்பம் அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கின்றனர். காடுகள் மற்றும் தாவரங்கள், வகைதொகையின்றித் தற்காலத்தில் அழிக்கப்பட்டு வருவதே இதற்குக் காரணம். “உப்புச் சமைஞ்சால் உப்பின் அருமை தெரியும். “அப்பன் சமைஞ்சால் அப்பன் அருமை தெரியும்” என்ற பழமொழி தற்காலத்து அவலநிலைமையை நாம் புரிந்து கொள்ள வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. காடுகளை அழிப்பது மகாதவறு ஆயினும் காடுகளுக்குத் தீ வைத்து இன்றும் கூட எரித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள் சமூகத்துரோகிகள். இவர்கள் பாரி வள்ளலின் தாவரங்களுக்கு உதவும் உயர்பண்பினை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தற்காலத்தில் பாடசாலைக் கல்வித் திட்டங்கள் புதிது புதிதாக உருவாக்கப்படுகின்றன. எதிலும் விழுமியக் கல்விக் கூறுகள் இடம் பெறுவதில்லை. விழுமியப் பண்புகள், ஒழுக்க நெறிகள், ஆன்மீக விழுமியங்கள் என்பனவற்றை மாணவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் பாடநூல்களில் கட்டுரைகள், கதைகள், வரலாற்று நிகழ்வு. நீதிப்பாடல்கள் என்பன இடம் பெறுவதில்லை. பாரி வள்ளல் முல்லைக் கொடிக்குத் தேர் ஈய்ந்தமை போன்ற பண்பாட்டுச் சம்பவங்கள் சேர்க்கப்படுவதில்லை. விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்விப் பாடங்களுடன், விழுமியங்களை இணைத்துக் கற்பிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. அதற்கேற்ற முறைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டால் இது சாத்தியமாகும். “மனமுண்டானால் இடமுண்டு” பழையன எல்லாம் கூடாதன அல்ல. புதியன எல்லாம் நல்லனவுமல்ல.

தாவரங்கள் மனிதர்களின் அத்தியவசியத் தேவைகளான உண்பதற்கு உணவு, குடிப்பதற்கு நீர், சமைப்பதற்கு எரிபொருள், வாழ்வதற்கு வீடு, மானங்காப்பதற்கு உடை, சுவாசிப்பதற்கு ஒட்சிசன் மற்றும் தளபாடங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்கின்றன. காடுகளைப் புதிதாக வளர்க்காமல் அழிப்பது பாவகாரியம். சமூகத்துரோகம் ஆகும். கழுவாய் கிடையாது. சூழல் பாதுகாப்பு மிகவும் அவசியம். சுற்றாடல் வளிமண்டலம் என்பன மாசடையாமல் பாதுகாக்கப்பட வேண்டும். தாமதித்தால் தவிக்க நேரிடும்.

பாரி ஒரு சாதாரண ஆத்மா அன்று. மகாத்மாவே தான், மகாத்மா என்றதும் அண்ணல் காந்தியடிகளின் நினைவு வருகிறது. “இப் பூமியில் மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தவற்கு வேண்டிய இயற்கை வளங்கள் போதுமானவையாக உள்ளன. ஆனால் மனிதர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவ்வளங்கள் போதுமானவையாக இல்லை.” இக் கூற்று காந்தியடிகள் மானுடத்திற்கு வழங்கிய பொருள் பொதிந்த கூற்று ஆகும். அத்துடன் எச்சரிக்கை மணியாகவும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

தற்கால மனிதர்கள் பேராசையினால் உந்தப்பட்ட இயற்கைச் செல்வங்களை வகை தொகையின்றிச் சுரண்டி எடுத்தும் வீணாக்கியும் வருகின்றார்கள். இப்பாரிய குற்றத்திற்குத் தண்டனையை இயற்கை வழங்கியே தீரும். இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. செயலுக்கேற்ற விளைவை இறை நீதி வழங்கியே தீரும்.

மருத்துவ மூலிகைகள் தாவர வர்க்கத்தைச் சேர்ந்தவை. நோய்களைத் தீர்ப்பதற்குச் சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் மருந்துகள் தயாரிப்பதற்கு மூலிகைகளே பயன்படுத்தப்படுகின்றன. பக்க விளைவுகள் இன்றி நோய் தீர்க்கும் வல்லமையுடையன. உயிர்காக்கும் மருந்து மூலிகைகளுடன் உயிர் பறிக்கும் விஷத்தாவரங்களும் உள்ளன. காஞ்சூரமரம், எட்டி என்பன விஷத்தாவரங்களுக்கு உதாரணங்கள். எனினும் காஞ்சுரம் விதைகள் மருந்துக்குப் பயன்படுகின்றன. "அளவுக்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது போல அளவோடு பயன்படுத்தினால் நஞ்சும் அமிர்தமாகும்.

ஆறறிவு படைத்த மனிதர்களை விடப் பன்மடங்கு தலைமைத்துவப் பண்பாட்டினைப் பேணி வருபவை தாவரங்கள். தம்மை முழுமையாக அர்ப்பணித்தும் ஏன் அழித்தும் கூடப் பிறரின் நல்வாழ்வுக்குப் பேருதவி செய்கின்றன. தியாகம், அர்ப்பணம், பொறுமை, பரோபகாரம், கொடை, சகிப்புத்தன்மை என்பவற்றின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டது, தாவரங்களின் பண்பாடு. தாவரங்கள், தத்தம் நெறிகள் பண்பாடுகள், வாழ்க்கை விழுமியங்களிலிருந்து இம்மியளவும் விலகியமைக்குச் சான்றுகள் இல்லை.

தாவரங்கள் மனிதர்கள் வெளிவிடும் காபனீரொட்சைட் அசுத்த வாயுவைத் தாம் சுவாசித்துக்கொண்டு தூய்மைப்படுத்திய ஒட்சிசன் வாயுவை மனிதர்கள் சுவாசித்து உயிர் வாழ்வதற்கு வழங்குகின்றன. இப்பரோபகாரச் செயற்பாடு ஒன்றே இறைநிலையே இயற்கை, இயற்கையே இறைநிலை என்ற கூற்றினை மெய்ப்பிப்பதற்குப் போதுமானது. மனித நாகரிகம் முளை விட்டுத் தோன்றிய தொன்மைக் காலத்திலிருந்தே மர வழிபாடு இருந்து வருகிறது. மரவணக்கம் இன்றும் இந்துமக்களிடையே நடை முறையில் இருந்து வருவது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். செய்ந்நன்றி மறக்காத சிந்தையர்தாம், என்பதை அறிந்தோ அறியாமலோ இந்துக்கள் மரவணக்கம், பஞ்ச பூதங்களை வழிபடுதல், நவக்கிரக வழிபாடு, இயற்கை வழிபாடு என்பவற்றில் இன்றும் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் பண்பாட்டு, கலாசார, ஆன்மீக இறுக்கம், செறிவு, உயிர்கலப்புப் பெற்றமை என்பவற்றைத் துல்லியமாகக் காட்டுகின்றன. மனிதர் மற்றும் உயிரினங்கள் தோன்றவும், வளரவும், மகிழ்ச்சி, இன்பம், அமைதிபெற்று வாழவும் தேவையான அனைத்தும் இயற்கையில் அமைந்துள்ளன.

## அட்டைப்பட விளக்கம்

'தாயக ஒலி' யின் பொங்கல் சிறப்பிதழ் வெளியீட்டின் போது, தாயக ஒலியின் ஆசிரியரிடமிருந்து புரவலர் ஹாஸிம் உமர் அவர்கள் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வதையும் அருகில் வைத்திய கலாநிதி தாஸிம் அகமது, கலைஞர் கலைச்செல்வன் ஆகியோர் நிற்பதையும், எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெரியார் காந்தி ஐயா, சரஸ்வதி அம்மா, கலாநிதி முல்லைமணி ஆகியோரையும் தரிசிக்க வைத்துள்ளோம்.

**அனைவருக்கும் தாயக ஒலியின் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

வவுனியூர் இரா உதயணன்

# ஆதாமும் ....

வீரசிங்கத்தார் போட்ட சத்தத்தில் வீடே அதிரத் தொடங்கியது.

பொறுமையாக இருங்கோ அப்பா.... பொறுமையாக இருங்கோ என்று சுபத்ரி வீரசிங்கத்தாரின் கையைப் பிடித்தாள். உங்கட "பிளட் ப்ரெசர்" ஏறப்போகுது அப்பா.

"ஏறிட்டுது... இவனாலே ஏறிட்டுது" மீண்டும் சத்தம் போட்டார் வீரசிங்கத்தார்.

அடுத்த பிளாட்டில இருக்கிற சின்னராசா குடும்பத்துக்கு சத்தம் கேட்கப் போகுது.... அவையளுக்கு இந்த விஷயம் தெரிந்தால் வீரகேசரியில் விளம்பரம் கொடுத்ததிற்கு சமம். சத்தத்தை குறையுங்கோ அப்பா....

என்ன சொல்லுறாய் என்ர மானம் மரியாதை எல்லாம் இந்த வயசில காற்றில போகப் போகுது. நான் யாரிட்ட போய் இதைச் சொல்லுறது. அவனை வளர்த்த வளர்ப்புச் சரியில்லை என்று என்னைத்தான் எல்லோரும் திட்டுவாங்கள். ஏன் உன்னையும் சேர்த்துத்தான்.

வீரசிங்கத்தாரின் முகம் முதல் உடம்பெல்லாம் வியர்த்து விட்டது.

"இப்படி இருங்கோ அப்பா... சுபத்ரி. வீரசிங்கத்தாரின் கையை மீண்டும் பிடித்தாள்.

வீரசிங்கத்தாரின் கோபம் தணியவேயில்லை. சுபத்ரியின் கையை உதறித் தள்ளினார்.

"அந்த ராஸ்கல் வரட்டும்." இண்டைக்கு உண்டோ இல்லையோ எண்டு பாத்திடுறன்"

நான் அவனை சும்மா விட்டுவிடுவேனா, எனக்கும் தலைக்குமேல கோபமாக இருக்கு. பொத்த வனின் மானத்தை வாங்கவென்று பிறந்து வந்திருக்கு. ஆனால் கோபத்தை விட்டுட்டு பொறுமையாகத்தான் இந்த விசயத்தை கையாளவேணும். அப்பா... உங்களுக்கு வருத்தத்தை தேடிக் கொள்ளாமல் கோபத்தை குறைத்து நிதானமாக யோசியுங்கோ...

"நீ இப்ப எனக்கு அட்வைஸ் சொல்ல வந்திட்டாய்..."

"நான் தானே வேற யார் சொல்லுறது. மனிசிக்கு கணவரின் உடம்பில கவனம் இருக்க வேணும். அதுதானப்பா சொல்லுறன். அதுவும் உங்கட மகன் நிவேதன் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே. பிடிவாதக்காரன். எங்க போய் இப்படிப் பழகினானோ தெரியேல்ல.

வீரசிங்கத்தார் மெல்ல கதிரையில் இருந்தார். மூச்சு வாங்கியது. இந்த வயசில இதெல்லாம் எனக்குத் தேவையா. இனசனங்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்ல. பெரிய உத்தியோகத்தில் இருந்து, மகனை பிரைவேட் கல்லூரியில விட்டு படுப்பிச்சா, இந்த மகனின் வேலையைப் பாருங்கோ என்று இனசனம் சொல்லி திட்டமாட்டினம்." மனது கனமாகி வலித்தது.

"வாழ்க்கையில ஏதோவொரு பிரச்சினைக்கு முடிவு காண இன்னொரு பிரச்சினை

தலைதூக்கி நிற்கும். இதுதான் வாழ்க்கையா? "வீரசிங்கத்தார் சோபாவின் விளிம்பில் தலையைச் சரித்து வைத்துக் கையை ஊன்று கோலாக்கி சோர்விழந்திருந்தார்.

சுபத்ரி "சோப்பி போட்டுக் கொண்டு வாரன் அப்பா" என்று சொல்லிக் கொண்டு சமையலறைக்குள் சென்றாள். வீரசிங்கத்தார் எட்டு மாதங்கள் பின்னோக்கி புரட்டிப் பார்க்கத் தொடங்கினார்.

வீரசிங்கத்தாரின் ஒரே மகன்தான் நிவேதன். முப்பது வருடங்களாக கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் ஒரு வீடு வாங்கியதைத் தவிர மிகுதிப் பணமெல்லாம் மகனின் படிப்பிற் காகத்தான் செலவழித்தார். நிவேதன் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போது கூட அவனைக் அரசு கடன் வாங்கவிடாமல் முழுச் செலவும் செய்தவர் வீரசிங்கத்தார் தான். ஆனால் இப்போது அவர தும் சுபத்ரியின் கனவுகள் எல்லாம் கரைந்து போனது போன்ற பிரமையில் அமர்ந்திருந்தார் வீரசிங்கம்.

கோப்பியுடன் வந்த சுபத்ரி சோர்வோடு அமர்ந்திருந்த வீரசிங்கத்தார் அருகில் அமர்ந்து கொண்டு கோப்பியை அவரிடம் நீட்டினாள்.

மெல்ல ஒரு வாய் உறிஞ்சிவிட்டு சுபத்ரியை திரும்பிப் பார்த்தார்.

இவனுக்கு கலியாணம் செய்து வைக்க நானும் நீயும் பட்டபாடு கொஞ்சநஞ்சமே. எத் தனை அழகான படிச்ச பிள்ளையள் பொருந்திய போதும் கூட தட்டிக் கழிச்சவன்.

"எனக்கு இப்ப கலியாணம் வேண்டாம் என்று சொன்ன போது கூட நாங்கள் கொஞ்சம் கூட யோசிக்காமல் அவனை வற்புறுத்தியது. அவன் அதற்கு மறுப்பு தெரிவித்தது எல்லாம் இப்பத்தான் ஏனென்று எனக்கு விளங்குது.

நாங்கள் உயிரோட இருக்கிற இந்தக் காலத்தில உனக்கொரு கலியாணம் செய்து வைத்து பேரப்பிள்ளையளைப் பார்க்க வேணும் என்று சொன்னபோது கூட, ஒன்றும் சொல் லாமல் கலியாணம் முடிச்சாலும் இப்ப பேரப் பிள்ளையளைப் பார்க்க முடியாது என்று எதற்கு சொன்னவன் என்று இப்பத்தான் எனக்கு விளக் கமாய்த் தெரியுது.

அவள் மௌலி எவ்வளவுபாவம் என்று யோசிச்சுப்பார்...

இவனை நம்பித்தானே தலையைக் கொடுத்தவள். அதுவும் ஸ்கொட்லாந்தில டாக்ராக வேலை செய்தவள். வேலையை விட்டுட்டு இவனுக்காகத்தானே இங்க வந்து இவனோட சேர்ந்து வாழ வேணும் என்று விடாப்பிடியாக அவளின் தகப்பனோடையும் தாயோடையும் சண்டை பிடிச்சு இங்கு வந்தவள்.

அவளின் கனவுகளை ஆசைகளை எல்லாம் இந்த அறுவான் அழிச்சிடுவான் போல இருக்கு. பெருமூச்சு விட்டுக் கொண்டார். சுபத்ரியின் கண்கள் மீண்டும் கலங்கி விட்டது.

நிவேதன் நேற்று மாலை வந்து சொல்லியத்தைக் கேட்ட சுபத்ரிக்கு இரவிரவாக நித்திரை வரவேயில்லை. உடனே வீரசிங்கத்தா ரிடம் சொன்னால் முழு விஷயமும் தலை கீழாகி விடும் என்று உடனே சொல்லாமல் அடக்கிக் கொண்டாள். வீரசிங்கத்தார் முன்கோபக்காரர். கையில் அகப்பட்டதால் எடுத்து நிவேதனுக்கு அடிக்கவும் தயங்கமாட்டார்.

வீரசிங்கத்தார் இரவு அயர்ந்து தூங்கிய நேரத்தில் விக்கி விக்கி அழுது தொலைத்து விட்டாள் சுபத்ரி.

இன்று காலை மெல்ல கொஞ்சம் கொஞ்சமாக நிவேதன் சொன்னதைச் சொல்லி

முடித்த போது வீரசிங்கத்தாருக்கு கோபம் உச்சிக்கு ஏறிவிட்டது. இந்த நிலையில் தானும் தனது கோபத்தையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினால் என்ன நடக்குமோ என்ற நிலையில் தனது உணர்வுகளை இதுவரை வெளிக்காட்டாமல் இருந்தும் கண்களில் ஏற்பட்ட கலக்கம் சுபத்ரியை வீரசிங்கத்தாருக்குக் காட்டிக் கொடுத்து விட்டது.

"ஏன் நீ இப்ப கண் கலங்கிறாய். நாங்கள் வடிவாகத்தான் அவனுக்கு தேவைப்பட்டதை கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து வளர்த் தம். நல்ல படிப்பை கொடுத்தும் இன்றைக்கு நல்ல நிலையில், நல்ல பொறுப்பான உத்தியோகத் தில இருக்கிற நிலைக்கு கொண்டு வந்து விட்டி ருக்கிறோம். எங்களால செய்ய முடிஞ்ச எல்லா வற்றையும் நல்ல நோக்கத்தோடு பெற்றோர் என்ற பொறுப்பிலிருந்து செய்து முடிச்சிருக்கிறம்."

வீரசிங்கத்தார் சுபத்ரிக்கு ஆறுதல் சொல்ல முயன்றார்.

ரெண்டு நாளைக்கு முதல் மௌலி வந்து விக்கி விக்கி அழுதபோது, அவன் நிவேதன் ஏதோ அவளை அடிச்சுப் போட்டான் எண்டுதான் நான் நினைச்சன்.

"மாமி இவரோட வாழ இயலாது. இவ ரின் செயல்களை எப்படிச் சொல்லுறது. இவரை நம்பித் தானே இவரோட வாழ ஆசைப்பட்டு உடன்பட்டனான். இவர் இப்படிச் செய்வார் என்று நான் கனவில கூட நினைக்கேல்ல. இவர் இப்படிப்பட்ட ஆள் என்று தெரிந்திருந்தால் கடைசி மட்டும் கலியாணத்திற்கு உடன்பட்டிருக்க மாட்டான். நான் ஏமாந்து போனன் மாமி"

"அப்படி என்ன பிள்ள உனக்குச்செய்யிறான்" ஒன்றுமறியாத சுபத்ரி மௌலியிடம் கேட்டாள்.

"நான் எப்படி மாமி அவரின்ட செயற்பாடு களை உங்களுக்குச் சொல்லுறது. அவரிடமே கேளுங்கோ... அவர் உங்களுக்கு தன்னைப் பற்றி சொல்லியே ஆக வேணும்... எனக்குச் சொல்லிப் போட்டார். உங்களுக்கும் சொல்ல வேணும். ஒரு தாயின் மடியில் படுத்திருந்து அழுவது போல சுபத்ரியின் மடியில் தலைவைத்து விக்கி விக்கி அழுத மௌலியின் தலையை வருடிவிட்டு ஆறுதல் சொன்னாள் சுபத்ரி.

மாலை வீரசிங்கத்தார் வெளியே போயி ருந்த சமயம் நிவேதன் வீட்டுக்கு வந்தான்.

"என்னடா தம்பி, மௌலியை ஏன்டா துன்புறுத்துறாய். உன்னை நம்பித்தானே வந்தவள்...." நான் அவனிடம் கேட்ட போது கண்வெட்டாமல் என்னையே பார்த்தான் நிவேதன்.

"அவள் என்னம்மா சொன்னாள்"

"உன்னைப் பற்றித்தான் உன் செயற்பாடுகளைப் பற்றித்தான்" சுபத்ரி சொல்லி முடிக்க முன் என்னை அவளுக்கு பிடிக்க வேணும் என்று இல்லை. நீங்களும் அப்பாவும் ஆசைப்பட்டு கலியாணப் பேசி பலமுறை சொன்னதற்காகத்தான் மௌலியை கலியாணம் முடிச்சனான். இப்பவும் நான் விவாகரத்து கொடுக்கத் தயார்.

சுபத்ரி அதிர்ந்து போனாள். என்னடா கலியாணம் முடித்து ஆறு மாதங்கள் கூட ஆகேல்ல. அதற்குள்ள விவாகரத்துப் பற்றி பேசிறாய்.

அப்பொழுது அறைக்குள் அமர்ந்திருந்த மௌலி எழும்பி சமையலறைப் பக்கம் வந்தாள். "மாமி" மௌலி கூப்பிட்டாள். நான் சின்ன வய சில சமய பாடத்தில படிச்சது ஞாபகத்திற்கு வருகுது.

கடவுள் ஆதாமையும் எவாளையும் படைத்தது (Adam and Eve) இந்த உலகத்தில்

மனித இனத்தை விருத்தியடையச் செய்ய என்று ஆசிரியர் சொன்னபோது, என்னோட படிச்ச சக மாணவன் ஏன் ஆதாமையும் ஸ்டீவ் Adam and Steve ஐயும் படைக்கேல்ல என்று கேட்டது ஞாபகத்திற்கு வருகுது.

இப்ப இவருக்கு நானில்லை. "நிவேத னுக்கு ஒரு நாதன்; மாமி" சொல்லிவிட்டு விக்கி விக்கி அழுத்த போது சுபத்ரிக்கு தலையே சுற்றியது. அப்படி அந்த இடத்திலேயே அமர்ந்து விட்டாள்.

வெள்ளைக்காரர் இப்படி இயற்கைக்கு மாறாகச் சென்றார்கள் என்றால்... இப்ப எங்கட இனத்திலும் இப்படிப் பலர்... சுபத்ரி முணு முணுத்தாள்.

*6ம் பக்க பட விளக்கம்...... நாவலர் பெருமானின் பாலபாடக் கதை:*

# உண்மையின் பயன்

ஓர் ஊரிலே ஒருவன் பல பாவங்களையும் அஞ்சாது செய்து கொண்டு வந்தான். அவனுடைய குரு 'இப்படிப் பாவங்களைச் செய்து ஏன் கெட்டுப்போகிறாய் இனி அப்படிச் செய்யாதே' என்று பல புத்திகளை அடிக்கடி அவனுக்குச் சொல்லிக் கொண்டு வந்தார். அவன் எல்லாப் பாவங்களையும் என்னால் விட முடியாது. உம்முடைய சொல்லுக்காக நீர் விடச் சொல்லுகிற பாவம் ஒன்றை மாத்திரம் விட்டுவிடுகிறேன்' என்றான். குரு 'பொய் சொல்லாகிய பாவம் ஒன்றையாயினும் ஒழித்து நட' என்று கட்டளை செய்தார்.

அதற்கு உடன்பட்ட சீடன், ஒருநாள் இரவு அந்த ஊரில் அரசனுடைய அரண்மனையிலே திருடும்படி போய், சமயம் பார்த்துப் பதுங்கி நின்றான். அப்பொழுது, மாறு வேடம் பூண்டு நகர சோதனைக்காகப் புறப்பட்ட அரசன் அவனைக் கண்டு, இவன் திருடன் என்றறிந்து, 'நீ எங்கே வந்தாய் உண்மையை சொல்' என்று கேட்டான். அவன் 'இராசாவுடைய அரண்மனையிலே திருடும்படி வந்தேன்' என்றான். அரசன் ஆச்சரியம் அடைந்து அவன் செய்கை முழுவதையும் பார்க்க நினைந்து, நானும் இங்கே திருடும்படி வந்தேன் எனக்கும் பாதி கொடு' என்றான்.

திருடன் அதற்கு உடன்பட்டு, அரசனைக் காவல் வைத்து, அரண்மனைச் சுவரிலே கன்னம் வைத்து, உட்புகுந்து ஒரு பெட்டியிலிருந்து விலையேறப் பெற்ற மூன்று இரத்தினங்களுள் இரண்டை எடுத்துக்கொண்டு மற்றைய ஓர் இரத்தினத்தைப் பாகம்பண்ண முடியாமையினாலே பெட்டியில் வைத்து, வெளியே புறப்பட்டு வந்து, அரசனுக்கு ஒன்றைக் கொடுத்து, மற்றொன்றைத் தான் கொண்டு போயினான். மாறுவேடம் பூண்டு வந்த அரசன் அவன் பெயர் ஊர்களைக் கேட்டு அறிந்து கொண்டான்.

பின்பு, அரசன் அரண்மனையினுள்ளே போய்ப் பெட்டியைப் பார்த்த பொழுது, ஓர் இரத்தினம் இருக்கக் கண்டு சந்தோஷித்து மற்றைய நாட்காலையில் தன்மந்திரியை அழைப்பித்து நம்முடைய அரண்மனையினுள்ளே கள்வர் வந்து புகுந்ததாகத் தெரிகிறது. பெட்டியைத் திறந்துபார்' என்றான். மந்திரி திறந்து பார்த்துப் பெட்டியிலிருந்து ஓர் இரத்தினத்தையும் தான் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு, 'விலையேறப்பெற்ற மூன்று இரத்தினங்களையும் காணவில்லை' என்றான். அரசன் அவனை உத்தியோகத்தினின்றும் நீக்கி, சத்தியத்திற் சிறந்த அந்தத் திருடனை அழைப்பித்து உபசரித்து, அவனைத் தனக்கு மந்திரியாக்கிக் கொண்டான்.

– தொகுப்பாசிரியர் சைவப்புலவர் சு.செல்லத்துரை

## கார்த்திகை – மார்கழி இதழ்



தாயக ஒலியின் 26ஆவது இதழ் கார்த்திகை-மார்கழி இதழாக வெளிவந்துள்ளது. வவுனியூர் உதயணனின் நூல் வெளியீடு, தாயக ஒலியின் 25ஆவது சிறப்பிதழின் வெளியீடு மற்றும் வன்னிச்சி நாச்சியாரின் புகைப்படம் ஆகியவை முன் பக்கத்தை அலங்கரித்துள்ளன. த.சிவசுப்பிரமணியத்தை பிரதம ஆசிரியராக கொண்டு இரு திங்கள் ஏடாக வெளிவரும் தாயக ஒலியின் இம்மாத இதழ் காத்திரமான ஆக்கங்களுடன் 48 பக்கங்களை கொண்டதாக வெளிவந்துள்ளது. 'சிறுவர் உரிமைகளும் பாதுகாப்பும்' எனும் தலைப்பிலான ஆசிரியர் தலையங்கத்துடன் ஏனைய ஆக்கங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. சிறுகதைகள், இலக்கிய ஆளுமைகள் பற்றியதான கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள், சிறுகதைகளின் வளர்ச்சியும் தாக்கமும் எனும் தலைப்பில் சிறுகதை பற்றியதான விளக்கங்களை உள்ளடக்கியதாக அழகிய விளம்பரங்களுடன் வெளிவந்துள்ளது. வாசிக்க வேண்டிய சஞ்சிகை.

- ஹாஷினி
சங்கமம் - வீரகேசரி

## தமிழ்மக்களின் ஒலி

அன்புள்ளத்து அன்பர் நண்பர் தம்பு சிவா அவர்களுக்கு வணக்கம்.

"தாயக ஒலி" தமிழ் மக்களின் ஒலியாக ஒலிப்பதைப் பார்க்க மகிழ்ச்சி. மேலும் வளர்ச்சிக்கான உங்கள் முயற்சிதான் துணைநிற்க வேண்டும்.

"தாயக ஒலி" கார்த்திகை - மார்கழி இதழில் என்னைக் கவர்ந்தது "பனிச்சங்கேணி அரசி வன்னிச்சி நாச்சியார்" தான். அவர் பற்றி ஆதாரபூர்வமான கட்டுரைகளைத் தகுதியான ஆய்வாளர்களிடமிடருந்து பெற்றுப் பிரசுரித்தால் நல்லது. கவனியுங்கள்.

எனது துணைவியார் இப்போது இலண்டன் வந்துவிட்டார். தங்களின் பிரசுரம் கிடைத்து மகிழ்ச்சியடைந்தார். அதனால் மேலே தரப்பட்டுள்ள முகவரிக்கு ஒலியை அனுப்பிவையுங்கள். இத்துடன் 20 பவுண்ட்ஸ் அனுப்பியுள்ளேன்.

எனது அடுத்த படைப்பு "இலண்டனில் தமிழர் திருமணங்கள்" என்பதாகும். விரைவில் வெளியிட உள்ளேன். வெளியானதும் தங்கள் மதிப்பீட்டிற்கு அனுப்பி வைப்பேன்.

தங்கள் தமிழ்ப்பணி தொடர வாழ்த்துக்கள்

அன்பு நன்றி வணக்கம்

பொன் பாலசுந்தரம்
வெலிங்டன், UK.


# உங்கள் விருந்து

## மரங்களின் முக்கியத்துவம்

தாங்கள் அன்புடன் அனுப்பித் தந்திருந்த "தாயக ஒலி"(27) இதழ் வரப்பெற்றேன். ஆக்கங்கள் நன்றாக இருந்தன. குறிப்பாக மூன்றாம் பக்கம் முதல் வெளியாகியுள்ள என் இதயத்திற்கு மிக நெருக்கமான ஒரு விடயமாகிய மரம் நடுகையின் முக்கியத்துவம் பற்றி முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்களது கட்டுரை காலத்திற்கு ஏற்றது. அவசியமானது. அதற்காக எனது சிறப்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. இரத்தினவடிவேல்
கொட்டாஞ்சேனை.

○ ○ ○




## கலாசார விழுமியங்களை தாங்கிவரும் இதழ்

நீங்கள் அனுப்பிய "தாயக ஒலி" இதழ் கிடைத்தது. மிகவும் ஆவலைத் தூண்டிய அவ்விதழை மேலோட்டமாக வாசித்த போது இந்த தமிழ் சமூகத்திற்கு நீங்கள் ஆற்றும் பணியின் கனதி புரிந்தது. அத்துடன் இறைவன் உங்களை இன்னும் நீண்ட ஆயுளுடன் நலமாக வைத்திருக்க வேண்டும் என்று உள்ளம் இறைவனை பிரார்த்தித்தது. தமிழ் மக்களின் பண்பாட்டு கலாசாரங்கள் விழுமியங்களை தாங்கி வரும் இதழுக்கு தாங்கள் பிரதம ஆசிரி யராக இருந்து சேவை ஆற்றுவது மதிப்புக்குரிய தொன்று. தாங்கள் தமிழ் சங்கத்தலைவராக இருந்து ஆற்றும் பணியும் உங்களை எங்கள் உள்ளத்தில் உயர்த்தி வைக்கின்றது. கட்டுரைகள் மிகவும் கனதியானவை. அனுபவம் வாய்ந்த படைப்பாளர்களால் ஆக்கம் எழுதப்பட்டிருந்தது. தாயக ஒலியின் சிறப்பை மேலும் மெருகூட்டு கின்றது. "நூற்பண்பாடும் வாசிப்புப் பண்பாடும்" "பேராசிரியர் நந்தியும் எழுத்தும்" "முத்தமிழின் வளர்ச்சியும் தளர்ச்சியும்" "உலகளாவிய மக்கள் போராட்டத்தில் மார்க்ஸியத்தின் தேவையை உணர்த்து கின்றன" "விஷ்ணு சர்மா - சோமசுந்தர புலவர் ஓர் இலக்கிய நோக்கு" என்னைச் சிந்திக்கத் தூண்டிய தங்கள் பிரதிக்கு மிகவும் நன்றி.

பா.பாலகணேசன்
யாழ்ப்பாணம்.

## அத்தனை ஆக்கங்களும் ஆரோக்கியமானவை

தாயக ஒலி 26இல் அமையப் பெற்ற அட்டைப் படம் உள்ளீடாக அத்தனை ஆக்கங்களும் ஆரோக்கி யமானதாக அமையப் பெற்றுள்ளது. சிந்தனையையும் அச்சத்தையும் வாசகர் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைவது ஆசிரியர் தம்பு சிவா எழுதிய சிறுவர் உரிமைகளும் பாதுகாப்பும்.

மேலும், நாட்டுக்கு முக்கிய சேவையாளர் பத்திரிகைக்காரர் அவர்களின் கண்ணீர் அஞ்சலியை பதிவு செய்தது வரவேற்கத்தக்க விடயம். அத்துடன் பேராசிரியர் சபா.ஜெயராசா எழுதிய சாமியாரின் கதைகளில் இருந்து தாய் தந்தையை இழந்து வாழ வழியின்றி சின்னஞ் சிறார்கள் இல்லங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டில் உள்ளவர்கள் போட்டி போட்டு உதவுவதில்லை. ஆனால் கோவில் என்றால் போட்டி போடுகிறார்கள் என்ற சிந்தனையை தூண்டும் வகையில் வாசகர் மத்தியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தக் கூடிய கதைகளாக அமைந்துள்ளதையிட்டு நான் மகிழ்வு கொள்கிறேன். உங்கள் பணி சிறப்புடன் தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

தாயக ஒலி
வாசகர்
(பெயர் குறிப்பிடவில்லை)

○ ○ ○

With Compliments From

# N.Ranjithakumaran

MA (Human Rights)

*Solicitor*

180 Mitcham Road
Tooting
London SW17 9NJ
UNITED KINGDOM

Tel - 0208 767 9717
Mobile - 0795 688 6749
Fax - 0208 767 9684

email : ranjit@ranjitandco.com





# Kanaga Solicitors

KEY PERSONNEL


Name : Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and present Experience:**
Immigration asylum, Residental conveyancing, Commercial conveyancing, Civil litigation, Criminal litigation, Family & divorce cases, Land loard & tenant, wills and probate.

Successful practitioner of 16 years.





**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
**email : kanakavalli_ek@yahoo.com**



Western Jewellers
Jewellers & Gem Merchants
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
First Tamil Jewellery Shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery
TOOTING BRANCH
230, UPPER TOOTING ROAD
LONDON SW 17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445
WEMBLEY BRANCH
5, PLAZA PARADE
EALING ROAD,
WEMBLEY
HAO 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909
Season's Best is Summer, Saree's Best is Silk Emporium Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road,
London SW17 7EN
Tel : 020 8672 1900
Opening Hours : Monday - Saturday ( 10.30 am - 6.30pm), Sunday (11.30am-6.30pm)

# Luckyland

## BISCUIT MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.

T: +94 081 2420574, 2420217, Fax : + 94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk

*சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440*